வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 14.02.2024 புதன்கிழமை | இதழ் : 45 | பக்கங்கள் : 12




# தேர்தல்:



## 2024 ஜனாதிபதி பதவிக்கு 2025 பாராளுமன்றத்துக்கு

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, பெப். 14

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்துக்குள் (இந்த ஆண்டு - 2024) நடத்தப்படும் என்பதுடன் குறிப்பிட்ட கால வரையறைக்குள், அடுத்த ஆண்டு (2025) பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான நிதி, 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும். தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக் குழுவுடன் அரசாங்கம் இணைந்து செயல்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அறகலய போராட்டம் காரணமாக ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஜூலை 14ஆம் திகதி பதவி விலகினார். இதைத் தொடர்ந்து அப்போது பிரதமராக இருந்த ரணில்

11

# நுண்நிதி கடன்:

## கிராமங்களில் மாத்திரம் 28 இலட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு,பெப்ரவரி14

**நுண்நிதி கடன் பிரச்னையால் கிராமப் புறங்களை சேர்ந்த 28 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 38-48 சதவீத வட்டி என்ற அடிப்படையில் கடன் வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் பெண்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் - இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பது தொடர்பான மேற்பார்வை குழு.**

மேலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் வீட்டுப் பணிக்குச் செல்வதற்கு நுண் நிதி கடன் பிரச்னையும் பிரதான காரணமாக உள்ளது என்றும் அந்தக் குழு கூறியுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழுவின் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் காமினி

11

## நிகழ்நிலை சட்டத்தைத் திருத்த அமைச்சரவை அனுமதியளிப்பு!

கொழும்பு, பெப். 14

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் பல திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அதன் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து குறித்த தொழில் துறை நிபுணர்களிடமிருந்து யோசனைகள் பெறப்பட்டுள்ளன. இந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில்

11

## வெப்பத்திலிருந்து பாதுகாக்க அதிக தண்ணீர் அருந்துங்கள்!

### மருத்துவர்கள் அறிவுறுத்து

கொழும்பு, பெப். 14

வெப்பத் தாக்கத்திலிருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள தண்ணீரை அதிகம் அருந்த வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

நாட்டில் தற்போது வெப்பமான வானிலை நிலவுகின்றது. எனவே, உடலில் நீரிழப்பு ஏற்படும். எனவே, நீரிழப்பு ஏற்படாமல் இருக்க, பொது மக்கள் தொடர்ந்து அதிகளவு தண்ணீர்

11

## 'அஸ்வெசும' மேன்முறையீடு; வடக்கில் விசாரணை நிறைவு

கொழும்பு, பெப். 14

"அஸ்வெசும" நலன்புரி திட்டத்தின் மேன்முறையீடுகள் தொடர்பான விசாரணைகள் வடக்கு மாகாணத்திலேயே முதலில் நிறைவு செய்யப்பட்டன என்று இராஜாங்க நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

"அஸ்வெசுமவின் இரண்டாம் கட்ட செயல்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நிதி அமைச்சர் இராஜாங்க செஹான் சேமசிங்க தலைமையில் நேற்று நடந்தது. இதில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸூம்

11

## சட்டவிரோத மின்வேலியில் சிக்கி இருவர் உயிரிழப்பு!

### மட்டக்களப்பில் துயரம்

மட்டக்களப்பு, பெப். 14

யானைக்கு வைக்கப்பட்ட சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி இருவர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - கிரான் - புலிபாய்ந்த கல் பிரதேசத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், குடும்பிமலை யைச் சேர்ந்த ஆறுமுகம் லோகநாதன் (51 வயது) பலிபாய்ந்த கல்லை சேர்ந்த விநாயகமூர்த்தி

11

## சுகாதார தொழில்சங்கங்கள் இன்றும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, பெப். 14

நாடளாவிய ரீதியில் சுகாதார தொழில்சங்கங்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பு இன்று புதன்கிழமையும் தொடரும் என்று சுகாதார தொழில் சங்கங்கள் கூட்டிணைவின் ஒருங்கிணைப்பாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சுகாதார தொழில்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் நிதி அமைச்சு, சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது. இதில், இணக்கம் எட்டப்படாத நிலையில் இன்றைய தினமும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்க சுகாதார தொழில் சங்கங்கள் தீர்மானித்தன.

நேற்று

11

## அத்தியாவசிய சேவை பிரகடனம்!

கொழும்பு, பெப். 14

சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மருத்துவமனைகள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசணை ஊட்டல் மற்றும் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும்

11

## சாந்தனை இலங்கை அனுப்பும் உத்தரவு இன்னும் ஒரு வாரத்தில்!

### இந்திய மத்திய அரசு அறிவிப்பு

சென்னை, பெப். 14

சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரத்தில் வழங்கப்படும் என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான சாந்தன் உள்ளிட்ட இலங்கையர்கள் நால்வர் திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சாந்தன் தற்போது சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையில், வயதான தனது தாயாரை பராமரிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றில் சாந்தன் வழக்குத் தொடுத்திருந்தார்.

11

## அநுரவோ சஜித்தோ ரணிலுக்கு சவால் அல்ல!

### ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, பெப். 14

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு போட்டியாக யாரும் இல்லை. சஜித்தோ அநுரவோ எமக்கு சவால் இல்லை. அத்துடன், ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு தற்போது நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி முறைமை இல்லாமல் ஆக்கப்படுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக் கும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார

11

# இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை பகிர்ந்துகொள்ள முக்கிய போட்டியாளர்கள் இருவரும் இணங்கிக்கொண்டுவிட்டது அந்தக் கட்சியினருக்கு சற்று ஆறுதலானதுதான்.

கடந்த ஞாயிறன்று நடந்த வவுனியா கூட்டத்தில் யார் முதலில் இருப்பது என்பது குறித்து முடிவெடுக்க இரண்டு தினங்கள் அவகாசம் கேட்டிருந்தனர். ஏன் இந்த முதல் வருடத்தில் இருவரும் அமர ஆசைப்பட்டனர் என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. இந்த முதல் வருடத்தில் பல முக்கிய தேர்தல்கள் வரவிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலையடுத்து பாராளுமன்றத் தேர்தல் நடக்கும் என்றும் அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

பொதுச்செயலாளர் பதவி என்பது எவ்வளவு தூரம் தேர்தல் நேரத்தில் அதிகாரமுள்ள பதவி என்பதும் நாம் புரிந்துகொள்ளக் கூடியதே. கட்சியின் தலைவரின் சம்மதம் இன்றியே கடந்த தேர்தலில் தேசியப் பட்டியல் எம்.பியாக ஒருவர் நியமிக்கப்பட்டமை மறந்துவிடக்கூடியது அல்ல. அதனால்தான் இந்த முதல் வருடத்தில் அதனை யார் வகிப்பது என்பதில் இழுபறி நிலவியது.

இப்போது அவர்கள் இருவரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தமையைத் தொடர்ந்து, எல்லாம் சுமுகமாக முடிந்திருக்கின்றது. திருகோணமலையில் நடந்த - குழப்பத்தில் முடிந்த மத்திய - பொதுச்சபைக் கூட்டத்தில் பொதுச் செயலாளராக குகதாசன் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், இப்போது அவர் ஒரு வருடத்துக்கு மாத்திரம் அந்தப் பதவியில் இருக்கவிருக்கிறார். அடுத்த ஆண்டு சிறீநேசன் பதவிவகிப்பார்.

யார் இந்த குகதாசன்? அவர் கனடாவிலிருந்து இங்கு வந்தவர். அதுமாத்திரமல்ல, கடந்த தேர்தலில் திருகோணமலையில் அவரை வேட்பாளராக நிறுத்தும் போதே, தமிழ் அரசின் பெருந்தலைவர் சம்பந்தன் ஒரு நிபந்தனையை விதித்தார். திருகோணமலையில் இருவர் வெற்றிபெறுவது சாத்தியம் இல்லை என்பதால் கட்சிக்கு இரண்டு தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் வந்தால் அதில் ஒன்றை இந்த குகதாசனுக்கு வழங்கவேண்டும் என்று சம்பந்தன் கேட்டுக்கொண்டாரென அப்போது செய்திகள் வெளிவந்திருந்தன. அவ்வளவு தூரத்துக்கு அவர் சம்பந்தனுடன் நெருக்கமானவராக இருந்தார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். அவரின் பொல்லாத காலமோ தெரியவில்லை. கட்சிக்கு ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர்தான் கிடைத்தார்.

ஆனால் அவரே பின்னர், வவனியாவில் பொதுச்சபைக் கூட்டம் நடந்தபோது திருகோணமலையிலிருந்து ஒரு 'கூட்டத்துடன்' வந்து சம்பந்தன் பதவி விலகி திருகோணமலையின் தேவைகளை கவனிக்கக்கூடிய ஒருவருக்கு இடம் தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவ்வாறு சம்பந்தன் பதவி விலகினால் குகதாசனே எம்.பி. ஆகியிருப்பார். கடந்த தேர்தலில் விருப்பு வாக்கு பட்டியலில் சம்பந்தனுக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் அவரே. இதனால் கோபம் அடைந்த சம்பந்தன் தனது மாவட்டப் பிரதிநிதியாக நியமித்திருந்த குகதாசனை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று.

திருகோணமலையில் நடைபெற்ற மத்திய செயல்குழுக் கூட்டத்தில் குகதாசன் பொதுச் செயலாளராக தெரிவான உடனேயே கொழும்பில் சமூக வலைத்தளங்களில் பரவிய செய்தி பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். அதாவது, குகதாசன் செயலாளரானதும் தமிழ் அரசின் கட்டுப்பாடு இப்போது 'ஒருவர்' கையில் வந்துவிட்டது என்று தெற்கில் செய்திகள் பரப்பப்பட்டன என்றால் அதன் அர்த்தம் என்ன என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதே. அவர் இரண்டுபட்டு நிற்கும் தமிழ் அரசின் ஓர் அணியைச் சேர்ந்தவர் என்ற கருத்து பரவலாகவே உண்டு.

இந்த குகதாசன் தமிழ் அரசின் பொதுச்செயலாளராகத் தெரிவானதும் இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஒரு குறிப்பைப் பகிர்ந்திருந்தார். அதனை முதலில் அப்படியே தருகின்றேன்.

'தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் குகதாசன் திருமணத்தையும் சென்னையில் அழைப்பாளனாய் நானே நடத்தினேன்.

மணமகள் அம்மாப்பேட்டையைச் சேர்ந்த ஐயங்கார் பெண். இருவரும் காந்தளகத்தில் பணி புரிந்த காலம்.

1970களில் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளராக நான். திருகோணமலை (குச்சவெளி?) இந்து இளைஞர் மன்றத் தலைவர் குகதாசன்.

அவ்வாறுதான் அவர் எனக்கு அறிமுகம். அந்த நாள்தொட்டே அவரும் நானும் நல்ல நண்பர்கள். இந்து இளைஞர் இயக்கம் தொடர்பாக அப்போது நானும் குகதாசனும் பல நல்ல பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

1990 தொடக்கத்தில் அவரும் அவர் காதலியும் சென்னை காந்தளகத்தில் பொறுப்பான பதவிகளில் எனக்கு உதவியாகப் பணி புரிந்தார்கள்.

வடபழனி கோயிலில் குகதாசனின் திருமணம். நண்பகல் உணவு எழும்பூர் உடுப்பி உணவு விடுதி. தங்கல் எழும்பூரில் என் வீட்டில்.'

- இதுவே மறவன்புலவர் அனுப்பிய குறிப்பின் ஒருபகுதி.

ஆக, புலம்பெயர்வதற்கு முன்னர் திருமலையில் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராக தன் சைவ சமயப் பணியாற்றியவர் குகதாசன். பின்னர் சென்னையில் வாழ்ந்த காலத்தில் மறவன்புலவரின் காந்தளகம் நிறுவனத்தில் பணியாற்றிய பின்னர் கனடாவுக்கு புலம்பெயர்ந்தவர்.

சச்சிதானந்தன் எதற்காக இதனைப் பகிர்ந்தார் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

- ஊர்க்குருவி.

# நுகர்வோர் வைப்பு தொகைக்கு மின்சார சபை வட்டி வழங்கும்!

கொழும்பு, பெப். 14

புதிதாக மின்சாரம் வழங்குவதற்காக நுகர்வோரிடமிருந்து இலங்கை மின்சார சபை சேகரிக்கும் வைப்புத் தொகைக்கு 2023ஆம் ஆண்டுக்கான வட்டியை செலுத்தத் தயார் என இலங்கை மின்சார சபை நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வோர் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

எஸ். துரைராஜா, காமினி அமரசேகர, யசந்த கோதாகொட ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, இலங்கை மின்சார சபை சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன்,

புதிய மின்சார இணைப்புகளுக்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்படும் வைப்புத்தொகைக்கு 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வட்டியாக 11.67 வீதத்தை செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தயாராக உள்ளது - என்றார்.

2024 ஜனவரி முதல் இலங்கை மின்சார சபை வட்டி செலுத்தும் என அவர் தெரிவித்தார். இந்தக் கொடுப்பனவு முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிய, சம்பந்தப்பட்ட வழக்கை மார்ச் 21ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.


சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே ஊடாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் ஊடாக மனுதாரர்கள் இலங்கை மின்சார சபை பிரிவு 28 (3)இன் கீழ், புதிய மின் இணைப்புகளை வழங்குவதற்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்த வேண்டும். இலங்கை மின்சார சபை இதுவரையில் அவ்வாறான வட்டியை செலுத்தவில்லை எனவும் இது தமது அடிப்படை மனித உரிமை மீறல் எனவும் இந்த மனுவை சமர்ப்பித்துள்ளது. (ஐ)

# கனடியத் தூதுவருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

கொழும்பு, பெப். 14

இலங்கைக்கான கனடியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று கனடிய தூதுவர் எரிக் வோல்ஸை கொழும்பிலுள்ள அவரின் பணிமனையில் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கனடியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் டானியல் வூட், அரசியல் அலுவலர் கணேசநாதன் சாகித்தியனன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்து ரைத்த தூதுவர், ஈழத்தமிழர்களின் அரசியல் நலன் சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயல்பாடுகளுக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளார் என்றும் கூறினார்.

# தென்னக்கோனின் பதவிக்காலம் வரும் 29ஆம் திகதியுடன் நிறைவு

கொழும்பு, பெப். 14

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பதவிக்காலம் எதிர் வரும் 29ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. அவர் மூன்று மாத காலத்துக்கு பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.



கடந்த நவம்பர் 29 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

எனினும், தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பாக அரசியல்வாதிகள், பொது அமைப்புகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இருப்பினும். தேசபந்து தென்னகோன் நவம்பர் 30 ஆம் திகதி தனது பதவியை ஏற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தங்கத்தின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 14

நாட்டில் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக குறைவடைந்து வருகின்றது.

நேற்றைய தினம் கொழும்பில் 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 64 ஆயிரம் ரூபாயாகவும், 24 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 900 ரூபாயாகவும் வீழ்ச்சியடைந்தது. (ஐ)

# 24 மணி நேர விபத்துகளில் ஐவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, பெப். 14

நேற்று காலை வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் ஐந்து பேர் பலியாகினர்.

குறித்த வாகன விபத்துகளால் எட்டு பேர் வரை காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

பெலியத்தை, பயாகலை, களுத்துறை, இபோலோகம மற்றும் நாவுல ஆகிய பகுதிகளிலேயே இந்த வாகன விபத்துகள் பதிவாகியுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
14.02.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மாசி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசின் கர்ஜனை - நமது கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கூறுவதைக் கேட்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கின்றார். அவரின் ஆலோசனையில் எந்தவோர் ஆக்கபூர்வமான விடயங்களும் இடம்பெறவில்லை - மாறாகப் பின்னடைவுகள்தான் ஏற்பட்டிருக்கின்றன. அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில்தான் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறானதோர் அறிவிப்பை செய்திருக்கின்றார். இதன்மூலம் தாங்கள் விரும்புவதைத்தான் செய்வோம் - அதனை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் தடுக்க முடியாது.

இப்போது தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? இன்றைய உலக ஒழுங்கில் நாடுகள்மீது எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாதளவுக்கே ஐக்கிய நாடுகள் சபை இருக்கின்றது. இந்த யதார்த்தத்தைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டே விஜயதாஸ பேசுகின்றார். உண்மையில், விஜயதாஸ பேசவில்லை மாறாக சிங்கள ஆளும் வர்க்கத்தின் மனநிலையை விஜயதாஸ பிரதிபலிக்கின்றார்.

இன்றைய பல்துருவ (பல அதிகாரங்கள் தலையீடு செய்யக்கூடிய சூழல்) உலக அரசியல் சூழலில் ஐக்கிய நாடுகள் சபையால் தலையீடுகள் மிகவும் மட்டுப்பட்டவை. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டமை போன்று ஐக்கிய நாடுகள் சபை ஓர் உல்லாச மன்றம் - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அணுகுமுறை அவ்வாறான ஒன்றாகத்தான் இருக்கின்றது.

இஸ்ரேலின் யுத்தத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 124 நாடுகளுக்கு மேல் கைச்சாத்திட்டு ஆதரவளித்த பிரேரணையால் எதனையும் செய்ய முடியவில்லை. இஸ்ரேல் ஒரு தனிநாடாக அதனை நிராகரித்துவிட்டது. இதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் எல்லை. ஏனைய விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. ஆனால், நாடுகளின் நலன்களுடன் தொடர்புபடும் யுத்தம் - அதன் விளைவுகள் - யுத்தத்துக்குப் பின்னரான மனித உரிமைகள் மீறலுக்கான நீதியை பாதுகாப்பது போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையிடும் எல்லை மிகவும் மட்டுப்பட்டதாகவே இருக்கின்றது. ஓர் எல்லைக்கு மேல் அதனால் எதனையும் செய்ய முடியவில்லை.


யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினான்கு ஆண்டுகளில் தமிழ்த் தேசிய தரப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்களுக்கு செல்லுதல் - அதன் மீதான நம்பிக்கையைப் பரப்புதல் - தாங்கள் நீதியை நெருங்கிவிட்டதான கதைகளைக் கூறுதல் - தங்களுக்குள் யார் இந்த விடயத்தை சரியாக கையாள்பவர்கள் என்று பட்டிமன்ற போட்டிகளில் ஈடுபடுதல் - இப்படியாகத்தான் நாட்கள் சென்றிருக்கின்றன. இன்று விடயங்களை நோக்கினால் அனைத்தும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசிய தரப்புகள் என்ன செய்யப் போகின்றன? விடயங்களை எவ்வாறு கையாளப் போகின்றன? கண்ணுக்கெட்டிய தூரத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமான சூழல் தென்படவில்லை. இலங்கைத் தீவின்மீது தலையீடுகளை செய்துவரும் அனைத்துலக தரப்புகள் - அடுத்த ஆட்சியாளர் தொடர்பிலேயே பிரதான கவனம் செலுத்திவருகின்றன. இந்த இடத்தில் அடுத்த ஜனாதிபதி தேர்தலை கையாள்வது தொடர்பில் மட்டும்தான் தற்போதைக்கு தமிழ் தரப்புகள் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

# 40 நாட்களின் சிறப்பம்சங்களில் முக்கியமானவை செபம், அன்பு

**கத்தோலிக்க மக்களின் தவக்காலம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

ம. விக்ரோறியா,
யாழ்ப்பாணம்.



சிறந்த முறையில் தவக்காலத்தை நெறிப்படுத்த தகுந்த ஆயத்தங்கள்.

முழு நோக்கம் -

ஏழை எளியவரோடு பகிர்ந்துண்ணல் மனம் மாறி நற்செய்தியை நம்புதல் உன்னைப்போல் என் அயலானை நேசித்தல் அன்பு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் ஆனேன். இறைவாக்கு வரம் எனக்கு இருப்பினும் மறைபொருள்யாவும் எனக்குத் தெரிந்தாலும் அறிவு அனைத்தும் எனக்கு இருந்தாலும் மலைகள் பெயர்த்தகற்றும் அளவுக்கு விசுவாசம் என்னிடம் நிறைந்திருப்பினும் அன்பு இல்லையேல் எனக்கு ஒன்றும் இல்லை இதற்கு வேண்டியவை
செபம்.

நோவாவும் அவரின் குடும்பமும் 40 நாள் இரவும் பகலும் செபத்தில் மூழ்கியதால் வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள் - செபத்தின் வல்லமை

யோனா இறைவாக்கினர் கோணி உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து 40 நாள் இறைவனை வேண்டி தெய்வ கோபம் விழாதபடி காப்பாற்றப்பட்டார் - செபத்தின் வல்லமை.

எலியா இறைவாக்கினர் 40 நாள் இறைவனை வேண்டி ஒரேபு மலையை அடைந்தார் - செபத்தின் வல்லமை

மோசே 40 நாள் சீனா மலையில் செபதபத்தின் இறைவனோடு ஒன்றித்து 10 கட்டளை பெற்றார் - செபத்தின் வல்லமை

இயேசுநாதர் 40 நாள் பாலைவனத்தில் நோன்பிருந்து இறைதந்தையை வேண்டினார் அப்போது சாத்தான் இறைவனும் அவரது இராச்சியமும் மனித வாழ்வின் இன்பமயம் என்று சுட்டிக்காட்டினான் அப்போது இயேசுநாதர் இறைவனை வேண்டி சாத்தானை வென்றார் - செபத்தின் வல்லமை

இயேசு நாதர் உயிர்த்து 40 நாள் தமது சீடருடன் செபத்தில் இருந்து விண்ணகம் எடுக்கப்பட்டார் - செபத்தின் வல்லமை

இயேசு பிறந்து 40 நாள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் போது அன்னாள் சிமியோன் காணும் பாக்கியம் பெற்றனர். அவர்கள் இருவரின் செபத்தின் வல்லமை

தவக்காலம் என்பது அருளின் காலம். அவை 40 நாட்கள். ஆனால், 46 நாட்கள் வரும் அதில் 6 நாட்கள் ஞாயிறு வருவதால் அவை ஓய்வு நாட்கள். நாங்கள் அந்த 40 நாட்களின் செபம், தானம், தருமம், தவம், அருளின் காலம் இறைவனின் இரக்கத்தையும் புரிந்து மன்னிப்பையும் அருள் வரங்களைப் பெறுவோம். அன்பு ஒன்று இருந்தால் சாத்தான் வெல்ல முடியும். நாங்கள் நோன்பு இருத்தல் சிலுவைப் பாதை சுற்றல் என்று பறைசாற்றாமல் மறைவாக உள்ள தந்தைக்கு மட்டும் தெரிந்தால் போதும்.

# 6 வகை பயிர்களுக்கு இலவச காப்புறுதி!

கொழும்பு, பெப். 14

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு இலவச காப்புறுதி வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


தற்போது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையினூடாக 6 வகை பயிர்களுக்கு விவசாய காப்புறுதி இலவசமாக வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக நெல், மிளகாய், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோளம், சோயா ஆகிய பயிர்களுக்கு இலவச காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

காட்டு யானைகள், வறட்சி, அதிக மழையால் ஏற்படும் சேதங்களுக்கு மாத்திரம் இந்த காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

ஏனைய பயிர்களுக்கு பயிர் சேத இழப்பீட்டின் கீழான காப்புறுதி வழங்கப்படும் என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 14 புதன்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 02
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பஞ்சமி




**மேடம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

**இடபம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**மிதுனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பேச்சில்காரம் வேண்டாம். வேற்று மதத்தவர் உதவுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தெளிவு பிறக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மகரம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். உங்களின் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். பழைய சொந்த பந்தம் தேடி வரும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

# இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை காத்து அவர்களுக்கு துணை நிற்போம்!

## ஆளுநர் உரையில் தெரிவிப்பு

சென்னை, பெப். 14

சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுடன் என்றும் நாம் துணை நிற்போம். அந்த வகையில் மத்திய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழகத்தில் ஒருபோதும் நடைமுறைப்படுத்த அனுமதிப்பதில்லை - என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் கூறியிருப்பதாவது:

சங்ககால தமிழர் கடைபிடித்த உலக உடன்பிறப்பு நேயத்தை எடுத்துரைக்கும், கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற இந்த மகத்தான வரிகள் தான்இந்த அரசை வழிநடத்தி செல்கின்றன. தமிழகத்தில் சமூக நல்லிணக்கத்தை பேணிக் காப்பதில் அரசு உறுதியாக உள்ளது.

சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுடன் என்றும் நாம் துணை நிற்போம். அந்த வகையில் மத்திய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழகத்தில் ஒருபோதும் நடைமுறைப்படுத்த அனுமதிப்பதில்லை என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது -

இவ்வாறு ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### ஈழத் தமிழர் பிரச்னையை மையமிட்டால்:

# காங்கிரஸ்டன் கூட்டணி தி. மு. க. வைக்க முடியாது

## தொல். திருமாவளவன் தெரிவிப்பு



சென்னை, பெப். 14

ஈழத் தமிழர்கள் பிரச்னையை மையமிட்டுப் பார்த்தால், தமிழகத்தில் காங்கிரஸுடன் தி. மு. க. கூட்டணி வைக்க முடியாது - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தி இந்து நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பட்டியலின விவகாரத்தில் தி. மு. க. மீது அதிருப்தி இருந்தும், விடுதலை சிறுத்தைகள் கட்சி தி. மு. கவுடன் கூட்டணியில் தொடர்வது ஏன்? சுயலாபமா..? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஈழத் தமிழர்கள் பிரச்னையை மையமிட்டுப் பார்த்தால், தமிழகத்தில் காங்கிரஸ் உடன் தி. மு. க. கூட்டணி வைக்க முடியாது. பல தளங்களில் நின்று போராட வேண்டிய நிலை ஒவ்வொரு கட்சிக்கும் இருக்கின்றது. சாதி வன்முறை, பெண்கள் தொடர்பான பிரச்னை, மொழி, இனம் அடிப்படையிலான பிரச்னை, வர்க்கப் பிரச்னைகள் எனப் பல தளங்களிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. அதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்க முடியாது.

வாக்கு வங்கி சிதறக்கூடாது என்பதற்காகவும், மிக மோசமான ஓர் எதிரியை வீழ்த்த வேண்டும் என்னும் நோக்கத்துக்கும் தி. மு. கவுடன் கூட்டணி வைத்திருக்கிறோம். தி. மு. கவுடன் சமூக நீதி, மாநில உரிமைகள், மொழி உரிமை என கருத்தியல் ரீதியாக உடன்பாடு இருக்கிறது. இருப்பினும், தி. மு. க. கூட்டணியில் நடைமுறை சிக்கல்களும் இருக்கத்தான் செய்கிறது. அந்த உடன்படும் புள்ளியில் தி. மு. கவுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சி நீடிக்கிறது. அதனால் தி. மு. கவுடன் இணைந்து பயணம் செய்கிறோம்." - என்றார். (ஐ)

# பா. ஜ. கவின் தலைமையுடன் தமிழ்நாடு குழு ஆலோசனை

சென்னை, பெப். 14

எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தலைமையிலான குழு அந்தக் கட்சியின் தலைவர் நட்டா மற்றும் அமித்ஷா ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

தமிழகத்தில் பாராளுமன்றத் தேர்தலை சந்திப்பது தொடர்பாக பாரதிய ஜனதா தீவிர ஆலோசனை நடத்தி வருகிறது. பாரதிய ஜனதா கூட்டணியில் எந்தெந்த கட்சிகள் இடம் பெறும் என்று இன்னும் உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

அதே நேரம் பா. ம. க., தே. மு. தி. க. ஆகிய கட்சிகளுடன் திரைமறைவில் தலைவர்கள் தொடர்ந்து பேச்சு நடக்கிறது. கூட்டணி பேச்சு ஒருபுறம் நடந்தாலும் பா.ஜனதா தனித்து போட்டியிடும் சூழ்நிலை வந்தாலும் அதையும் சந்திக்கும் வகையில் கட்சியை தயார்படுத்தி வருகிறார்கள்.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் கட்சியின் தேசிய தலைவர் நட்டா, மத்திய மந்திரி அமித்ஷா ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அவர்களின் ஆலோசனைப்படி தேர்தலை எதிர்கொள்ள தமிழ்நாடு பா. ஜ. கவினர் திட்டமிட்டுள்ளனர். (ஐ)

# செந்தில் பாலாஜி இராஜினாமா!

சென்னை, பெப். 14

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் கைதாகி, 243 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்துவந்த அமைச்சர் செந்தில் பாலாஜி, தனது பதவியை நேற்றுமுன்தினம் இராஜினாமா செய்தார்.

கடந்த வழக்கில், செந்தில் பாலாஜி கடந்த 243 நாட்களுக்கும் மேலாக குற்ற வழக்குக்காக சிறையில் இருக்கிறார். அவர் எந்த அடிப்படையில் துறை இல்லாத அமைச்சராக பதவியில் நீடிக்கிறார்? இதன்மூலம் தமிழக அரசு என்ன சொல்ல வருகிறது என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை மறந்துவிடக் கூடாது என்று அறிவுறுத்தினர். இந்த நிலையில் நேற்று முன்தினம் செந்தில் பாலாஜி தனது பதவியை இராஜினாமா செய்தார். அவரின் இராஜினாமாவை ஏற்றுள்ளதாக நேற்றைய தினம் ஆளுநர் ஆர். என். ரவி அறிவித்துள்ளார். (ஐ)

# சமூக நீதியை தலைகீழாக மாற்றிய ஜனாதிபதி ரணில்

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14

**சமூக நீதியை தலைகீழாக மாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் இணையுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



அரசாங்கத்தின் இயலாமையை எதிர்க்கட்சிகள் மீது சுமத்தும் நோக்கில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் வரையறையற்ற வரி விதிப்புக்களினால் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

பெரு நிறுவனங்களுக்கு வரிச் சலுகை வழங்கும் அரசாங்கம் பொதுமக்கள் மீது வரிச் சுமையை திணிக்கின்றது.

அரசியல் சாசனத்திற்கு முரணான வகையில் அரசாங்கத்தினால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளில் எவ்வித சட்டபூர்வ தன்மையும் கிடையாது என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார். (அ)

# பொன்சேகாவிடமிருந்து தவிசாளர் பதவி பறிப்பு?

கொழும்பு, பெப். 14

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை நீக்குமாறு அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது .

கட்சிக்குள் பேச வேண்டிய விடயங்களை பொதுவெளியில் பேசுதல், கட்சி தலைவருக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தல் மற்றும் கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளை விமர்சித்தால் உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக்கொண்டே சரத் பொன்சேகாவுக்கு எதிராக இந்த நடவடிக்கையை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவுக்கும், சரத் பொன்சேகாவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுவந்த நிலையில் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைப்பதற்கு எடுத்த முடிவு பொன்சேகாவை மேலும் கடுப்பாக்கியது. இதனையடுத்து ஊடக சந்திப்புகளை நடத்தி ஐக்கிய மக்கள் சக்தியையும், அதனை தலைமையையும் பொன்சேகா கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

அத்துடன், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை புறக்கணித்து வெளிநடப்பு செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த முடிவுக்கு எதிராக பொன்சேகா செயற்பட்டார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ‘சிம்’ அட்டைகளை பதிவு செய்யுங்கள்!

கொழும்பு, பெப். 14

கையடக்கத் தொலைபேசிகளுக்கான சிம் அட்டைகளை சரியான முறையில் பதிவு செய்யுமாறும் பொது மக்களை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சட்டவிரோதமான செயல்களுக்கு முகம்கொடுக்காமல் இருக்க சிம் அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

அதன்படி கையடக்கத் தொலைபேசிகளில் #132# எனரைப் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை சரி பார்க்க முடியும் என ஆணைக் குழுவின் பிரதி பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்துள்ளார்.

மேலும் ஒருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் தங்களுக்குத் தெரியாமல் வேறு சிம் கார்டுகள் வழங்கப்பட்டிருந்தால் அதன் இணைப்பை உடனடியாக துண்டிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மற்றவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்ட சிம் அட்டைகளை பயன்படுத்தி பல சட்டவிரோதச் செயல்கள் நடப்பதாக அண்மைக் காலங்களில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆகவே தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம்கள் இதுபோன்ற சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டால் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# உமா ஓயா திட்டத்துக்கு ஜே.வி.பி. பங்களித்தது!

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 14

நாட்டில் மிகப்பெரிய நீர் மின் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு முதல்முறையாக மக்கள் விடுதலை முன்னணி சாதகமான பங்களிப்பை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

உமா ஓயா திட்டம் நாட்டுக்கு மிகவும் தேவையானது என்றும் இந்த திட்டத்தின் மூலம் குறைந்த விலை மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் மகிந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மிகப்பெரிய நீர் மின் நிலையங்களில் ஒன்றாக உமா ஓயா திட்டத்தின் 120 மெகாவாட் நீர்மின் நிலையம் இம்மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணி கூட சாதகமான பங்களிப்பை வழங்கிய ஒரே பெரிய உட்கட்டமைப்பு திட்டமாக இது அமைந்துள்ளதாக மகிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

உமா ஓயா திட்டத்தை செயல்படுத்துவது இந்த நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும் என்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


இந்த திட்டம் கைவிடப்பட்ட பின்னர், மக்கள் விடுதலை முன்னணி உமா ஓயா திட்டத்தை மிகவும் வெளிப்படையாக விமர்சித்திருந்தாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்றத்தில் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தாக மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரியில், விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக இருந்த ஜே.வி.பி.யின் தற்போதைய தலைவரே உமா ஓயா திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றிருந்ததாக மகிந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# அமெரிக்கத் தூதுவருடன் வர்த்தக அமைச்சர் பேச்சு!

கொழும்பு, பெப். 14

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.



அதன்படி வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் சந்தைப் பொருளாதாரத்திற்குள் இலங்கை தற்போது பிரவேசித்துள்ளதாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை, அதிகரித்து வரும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் பண வீக்கத்தைக் குறைப்பதற்கும் இலங்கை தனது சந்தையை விரிவுபடுத்த வேண்டுமென அமெரிக்கத் தூதுவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் உற்பத்திச் செலவைக் குறைத்தல், அறுவடைக்குப் பின்னரான சேதங்களைத் தடுப்பது மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைப்பதில் வர்த்தக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும் தன்னிறைவுப் பொருளாதார அமைப்பிற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப அறிவும், சிறுதொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான ஆதரவும் வழங்கப்படவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யுக்திய நடவடிக்கை தொடரும்

கொழும்பு, பெப். 14

ஜனாதிபதி, பிரதமர், அல்லது பாராளுமன்றம் பணிப்புரை விடுத்தால் மாத்திரமே யுக்திய நடவடிக்கை நிறுத்தப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களை முழுமையாக ஒழிக்கும் வரையில் இந்த யுக்திய நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம்.

நாட்டிலுள்ள சில சத்தம் போட்டாலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு இந்த யுக்திய நடவடிக்கையை தொடருமாறு நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு மகா சங்கத்தினரும், தொண்ணூற்று ஒன்பது வீதமான நாட்டு மக்களும் கோருகின்றனர்.

எனவே ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது நாடாளுமன்றமோ இதனை நிறுத்துமாறு அறிவிக்கும் வரையில் இதனை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்-என்றார். (அ)

# நிறைவேற்றதிகார முறை நீக்கம் நிபந்தனை விதிக்கிறது பெரமுன

கொழும்பு, பெப். 14

**பிரதமர் தலைமையிலான அரசியல் கட்சியொன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறும் தேர்தல் முறைமை நாட்டில் அறிமுகப்படுத்தப்படும்வரை நிறை வேற்று அதிகாரஜனாதிபதி முறை நீக்கத்திற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என பொதுஜனபெரமுன தெரிவித்துள்ளது.**

தற்போதைய தேர்தல் முறையின் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதை எதிர்ப்பதாக பொதுஜனபெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கிய பின்னர் தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் பாராளுமன்ற தேர்தலை நடத்தினால் எந்த கட்சியாலும் தெளிவான பாராளுமன்றப் பெரும்பான்மையை பெறமுடியாது என அவர் கூறினார்.

அதன் பின்னர் நாட்டின் தலைவரான பிரதமர் பல அரசியல் கட்சிகளின் ஆதரவை கோரி ஆட்சியமைக்கவேண்டும் என தெரிவித்துள்ள சாகர காரியவசம், அவ்வாறான அரசாங்கம் தனக்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் விருப்பத்தின் அடிப்படையிலேயே ஆட்சி செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை பொதுஜன பெரமுன எப்போதும் கொண்டுள்ளது என தெரிவித்துள்ள சாகர காரியவசம், அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை காரணமாக மாகாண சபைகள் முறைகள் போன்றவற்றினால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுவதில்லை என்பது உண்மை எனவும் குறிப்பிட்டுள்ள அவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் கீழ் அவைகள் ஏதோ ஒரு விதத்தில் கட்டுப்படுத்தப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார். (அ)

## பொலிஸாருக்கான உணவு, பயண, தங்குமிட கொடுப்பனவு நேற்றுமுதல்!

கொழும்பு, பெப். 14

இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான, அதிகரிக்கப்பட்ட உணவு, பயண மற்றும் தங்குமிட கொடுப்பனவு நேற்று முதல் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவுக்கு மேலதிகமாக பட்ஜெட்டின் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவில் அரைவாசி வழங்கப்படவுள்ளது.

கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுவந்த 17,000 ரூபாய் கொடுப்பனவு பட்ஜெட்டின் மூலம் 11,800 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட குறித்த தொகையில் 50 சதவீதத்தை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மீகொடை துப்பாக்கிச்சூட்டு சம்பவம் 5 பொலிஸ் அலுவலர்கள் இடமாற்றம்!

கொழும்பு, பெப். 14

மீகொடை பொருளாதார மத்திய நிலையத்தில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களால் நேற்று முன் தினம் அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ தினத்தன்று குறித்த பொருளாதார மத்திய நிலையத்துக்குள் பிரவேசித்த இருவர் வர்த்தக நிலையொன்றில் காசாளராக பணியாற்றிய யுவதி மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்த 45,000 ரூபாய் பெறுமதியான பணத்தை கொள்ளையிட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தொழில்நுட்பக் கோளாறினால் மீள தரையிறக்கப்பட்ட விமானம்

கொழும்பு, பெப். 14

மெல்பேர்ன் நகரிலிருந்து கொழும்பு வரை சேவையில் ஈடுபடும் விமானமொன்று தொழில்நுட்ப கோளாறினால் மீண்டும் தரையிறக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானம் மெல்பேர்ன் நேரப்படி நேற்று முன்தினம் மாலை 6.18 அளவில் பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன் தொழில்நுட்ப கோளாறினால் மீண்டும் தரையிறக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கன் விமான சேவையின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

யு.எல் 605 எயார்பஸ் ஏ-330 வகையை சேர்ந்த விமானமொன்றே இவ்வாறு தொழில் நுட்பக் கோளாறுக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானத்தில் பயணித்த 15 விமான ஊழியர்கள் மற்றும் 202 பயணிகளுக்கான தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக சிறிலங்கன் விமான சேவையின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

விமானத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு நிவர்த்திக்கப்பட்டு மீண்டும் இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ)

# சோதனை நடவடிக்கையின்போது பாணந்துறை பகுதியில் தாக்குதல்

### நால்வர் வைத்தியசாலையில்

கொழும்பு, பெப். 14

பாணந்துறை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனையிட முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நால்வர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை வலய போக்குவரத்து பிரிவு உத்தியோகத்தர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், நேற்று அதிகாலை பாணந்துறை வலான பாலத்திற்கு அருகில் வாகனச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது, மொரட்டுவையில் இருந்து பாணந்துறை நோக்கி மூன்று பேருடன் பயணித்த மோட்டார் சைக்கிளை சோதனையிட்டபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், அதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பின்னர், இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை கைது செய்ததாகவும், மற்றைய நபர் தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான நான்கு பேரும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமானதாக இல்லை எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஜே.வி.பிக்கு இந்தியா 300 கோடி ரூபா பரிசு!

### தம்மரத்ன தேரர் கருத்து

கொழும்பு, பெப். 14

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட சிவப்பு சகோதரர்களுக்கு 300 கோடி ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாக வலவாஹெங்குனுவெவே தம்மரத்ன தேரர் கூறியுள்ளார்.

ஜே.வி.பியின் இந்திய பயணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனுவெவே தம்மரத்ன தேரர்,

அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட சிவப்பு சகோதரர்களுக்கு 300 கோடி ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த பணம் தேர்தலுக்கு செலவு செய்வதற்காகவே வழங்கப்பட்டுள்ளது. இதன் உண்மை தன்மை குறித்து சிவப்பு சகோதரர்கள் வெளிப்படுத்த வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

## மனோஜ் கமகே பதவி விலகல்!

கொழும்பு, பெப். 14

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளர் பதவியிலிருந்து சட்டத்தரணி மனோஜ் கமகே விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி, நேற்று முதல் அமுலாகும் வகையில் குறித்த பதவியிலிருந்து தாம் விலகியுள்ள அந்தக் கடிதத்தில் சட்டத்தரணி மனோஜ் கமகே குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் அந்த நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக சட்டத்தரணியாக தாம் பணி புரிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பணிப்பாளர் என்ற வகையில் தமது பணிப்பாளர் சபையுடன் உரிய தீர்மானங்களை நிறைவேற்றியதாகவும் நிறுவனத்தில் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்துள்ளதாகவும் மனோஜ் கமகே தமது பதவி விலகல் கடிதத்தில் அறிவித்துள்ளார். (அ)

## கைதிகள் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 14

நாளாந்தம் சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சுமார் 400 பேர் சிறைகளுக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலை நிர்வகித்து கைதிகளை தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுவரையில் சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 14

பமுனுகம, உஸ்வெடகெய்யாவ தல்தியவத்த கடற்கரையில் நீராடச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவர் என பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஏனைய அதிகாரிகள் குழுவுடன் நீராடச் சென்ற கான்ஸ்டபிள் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

ராகம வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் உயிரிழந்த கான்ஸ்டபிளின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஈழத் தமிழர் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு; தமிழரசுக் கட்சி தீர்மானம் எடுக்க வேண்டும்!

## எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 14

**ஈழத் தமிழ் மக்களுடைய சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு தொடர்பில் இலங்கை தமிழரசு கட்சி தீர்மானத்தை எடுக்க வேண்டுமென வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈழத் தமிழ் மக்களுடைய சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் வலியுறுத்தவில்லை. எனினும் கடந்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அமெரிக்க காங்கிரஸ் பிர திநிதிகளை சந்தித்தபோது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பொது மக்கள் வாக்கெடுப்பு மூலம் நடத்த வலியுறுத்துமாறு அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த 2020 பாராளுமன்ற தேர்தல் அறிக்கையில் பொதுவாக்கெடுப்பு தொடர்பில் குறிப்பிட்டிருந்தாலும் வலியுறுத்தாது இருந்து அதற்கு பல்வேறு காரணங்களை கூறிக் கொண்டிருந்தவர்கள் தற்போது அதனை வலியுறுத்துவது வரவேற்கத்தக்கது.

இவ்வாறானதொரு நிலையில், ஜனநாயகப் போராளிகள் கட்சியினரும் இலங்கை தமிழரசுக் கட்சியினருமே வாக்கெடுப்பை உத்தியோகபூர்வமாக கோரவில்லை. அவர்களும் வாக்கெடுப்பை கோரும் பட்சத்தில் அது முக்கியமான விடயமாக பார்க்கப்படும்.

தமிழகம் உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களில் ஈழத் தமிழ் மக்களுடைய பிரச்னைகளின் வேகம் தற்போது குறைவடைந்து செல்கின்றது.

இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்பை வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் நடாத்துவதற்கு அனைவரும் வலியுறுத்த வேண்டும்-என்றார். (அ)



# மன்னார் வைத்தியசாலையிலும் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

மன்னார், பெப். 14

மருத்துவர்கள் தவிர்ந்த இலங்கையில் உள்ள 72 சுகாதார தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் ரூ. 35,000 கொடுப்பனவு கோரி நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகாதார தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

நேற்று முன் தினம் நிதியமைச்சுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததை தொடர்ந்து 72 சுகாதார தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார பணியாளர்களும் நேற்றுக் காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார பணியாளர்கள் வைத்தியசாலை வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். (அ)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் அமோக வெற்றியீட்டுவார்!

## வஜிர அபேவர்தன நம்பிக்கை

கொழும்பு, பெப். 14

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமோக வெற்றியீட்டுவார் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமொன்றில் அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை வரலாற்றில் புதிய சாதனையுடன் ரணில் தேர்தலில் வெற்றியீட்டுவார்.

வரலாற்றில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்டர் என்ற சாதனையுடன் ரணில் ஜனாதிபதி பதவியில் மீண்டும் அமர்வார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பீடு செய்யக்கூடிய உலகத் தலைவர்கள் எவரும் இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி சீ ஜின் பிங், ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆகியோரை விடவும் ரணில் விக்ரமசிங்க முன்னிலை வகிக்கிறார்.




ரணில் விக்கிரமசிங்க உலகிற்கே தலைவர்.

ரணில் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்றவுடன் அனைவரும் ஒன்றிணைந்து அவரை தோற்கடிக்க முயற்சிக்கின்றனர்.

ஏனெனில் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அச்சம் கொண்டுள்ளனர்.

பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு ஆட்சியை பற்றி பெற்றுக்கொள்ள எவரும் முயற்சிக்க வேண்டாம்-என்றார். (அ)

# கிளிநொச்சி அரச அதிபர் றூபவதிக்கு பிரியாவிடை

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் அரச சேவையிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.

தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான இன்னியம் நிகழ்வுடன் அரசாங்க அதிபர் மற்றும் அவரின் துணைவர், அரசாங்க அதிபரின் தாயார் மற்றும் அவரின் மகள், ஆகியோர் வரவேற்கப்பட்டு விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து, மாவட்ட அரசாங்க அதிபரின் சேவை தொடர்பில் அதிகாரிகளால் பாராட்டுக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.



நிகழ்வில் அரசாங்க அதிபரை கௌரவப்படுத்தும் நோக்கில் வாழ்த்துப்பாக்களும், நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டம் 1984 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனி மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அந்த மாவட்டத்திலிருந்து அரச நிர்வாக சேவைக்கு தெரிவான முதலாவது நிர்வாக சேவை அதிகாரி இவரென்பது விசேட அம்சமாகும்.

இலங்கை அரச நிர்வாக சேவையில் இவர் தொடர்ச்சியாக 32 வருடங்கள் கடமையை நிறைவேற்றியதுடன், கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது பெண் அரச அதிபராகவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். (அ)

# மகாராணியின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற ஜனாதிபதி; 17 மாதங்களின் பின் வெளியான விமான ரிக்கெட் விலை

கொழும்பு, பெப். 14

2022ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாதங்களிலேயே பிரித்தானியாவுக்கு உடனடி பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

எலிசபெத் மகாராணியின் இறுதி சடங்கில் பங்கேற்க 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி ரணில் இந்த பயணத்தை மேற்கொண்டார்.

இலங்கை அப்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்ததுடன், இத்தருணத்தில் ஜனாதிபதி வெளிநாடுகளுக்குத் தேவையற்ற பயணங்களை மேற்கொண்டு மக்களின் வரிப் பணத்தை செலவழிக்க வேண்டுமா என்ற கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்பியிருந்தன.

இந்த நிலையில் ரணில் இந்தப் பயணத்தை மேற்கொள்ள விமான ரிக்கெட்டுக்காக செலவு செய்த நிதி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சி இது தொடர்பில் 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி தகவல் கோரியிருந்த நிலையில், ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான முக்கியத் தகவல் எனக் கூறி ஜனாதிபதி செயலகம் தகவல் கோரிக்கையை நிராகரித்திருந்தது.

எவ்வாறாயினும், பல சந்தர்ப்பங்களில் நீண்ட மேல்முறையீட்டு விசாரணைகளின் மூலம், மேல்முறையீட்டு விசாரணைக்குப் பிறகு வழங்கப்பட்ட உத்தரவின்படி பயணம் தொடர்பான தகவல்களை நவம்பர் 30, 2023 அன்று வெளியிட ஆணையம் ஒப்புக்கொண்டது.

அதன் பிரகாரம் வழங்கப்பட்ட தகவலில் 5.6 மில்லியன் ரூபாவை (ரூ. 5,696,140.00) செலவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சியிடம் வினவியபோது, ”தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்ட 14 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனம் தகவல்களை வழங்க வேண்டும் என்றாலும், அதற்கான பதிலைப் பெற ஒரு வருடத்திற்கும் மேலாக காத்திருந்தேன்.” என்றார். (அ)

# வீதியில் காயும் நெல்லினால் விபத்துகள் ஏற்படும் அபாயம்



அம்பாறை, பெப். 14

**அம்பாறை மாவட்டத்தில் வீதியில் காயவிடப்படும் நெல்லினால் விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக பெரும்போக வேளாண்மை அறுவடை இடம்பெற்றபோதும் நெல்லை அரிசி ஆலை உரிமையாளர்கள் ஈரத்துடன் ஒரு விலையையும், காய்ந்த நெல்லுக்கு ஒரு விலையையும் வழங்குகின்றனர்.

இதனால் விவசாயிகள் தாம் அறுவடை செய்த நெல்லை பல சிரமங்களுக்கு மத்தியில் காய வைத்து உலர்த்தி சேமித்து வைத்து நல்ல கிராக்கியுள்ள போது விற்பனை செய்வதற்காக பிரதான வீதியின் இரு மருங்கிலும் உலர்த்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த போகங்களின்போது நெல்லை உலர்த்துவதற்காக பிரதான வீதிகளையே விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது இவ்வாறு வீதிகளை ஆக்கிரமித்து நெல்லை உலர விடுவதால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதால் வீதிப் போக்குவரத்து பொலிஸார் வீதியின் ஓரமாக நெல்லை உலர விடுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அண்மையில் பெய்த அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அம்பாறை மாவட்ட விவசாயிகள் இப்போகம் பெரும் நட்டம் அடைந்துள்ளனர்.

(அ)




# மாணவர்கள் கௌரவிப்பு

அம்பாறை, பெப். 14

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட புலமை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகவுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும் கௌரவ அதிதியாக கல்முனை வலையக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமும் விசேட அதிதிகளாக பிரதிக் வலையக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச். எம்.ஜாபீர், எம்.எச்.றியாஸா, பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ், அதன் உறுப்பினர் எம்.ஸீ.எம்.ஹஸீர், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதி அதிபர்களான திருமதி குறைசியா றாபி, றின்ஷா பர்வின், உதவி அதிபர் எம்.ஏ.ஸி. எல்.நஜீம், பாடசாலையின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இரும்புப் பாலம் சேதம்



அம்பாறை, பெப். 14

சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்திற்கு செல்லும் பிரதான இரும்பு பாலம் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலைக்கு துருப்பிடித்து ஓட்டை விழுந்துள்ளது.

சாய்ந்தமருதிலுள்ள எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், கலாசார மண்டபம், பொது விளையாட்டு மைதானம், சுகாதார வைத்திய நிலையம், ஹிஜ்ரா பள்ளிவாசல், குவாசி நீதிமன்றம், பெண்கள் அரபிக் கல்லூரி, கால்நடை அபிவிருத்தி நிலையம் போன்ற முக்கியமான இடங்களுக்கு செல்லும் மக்களும், வாகனங்களும் இப்பாலத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

இப்பாலம் முற்றாக இறந்து அழிவதற்கு முன் இப்பாலத்தை திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# கரையொதுங்கியது சடலம்

அம்பாறை, பெப். 14

கல்முனை பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய ஆணின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பில் விஷ்ணு கோயிலை அண்டிய கடற்கரை பகுதியில் குறித்த சடலம் மீட்கப்பட்டதுடன் சடலத்தை அடையாளம் காண்பதற்காக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்ட இச்சடலம் மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாளையம் பகுதியை சேர்ந்த கதிரவேல் பத்மராஜ் (வயது 59) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தை என அவரது மனைவி வசந்தி அடையாளம் காட்டியுள்ளார்.

மரணமடைந்தவர் தனது வீட்டில் இருந்து கடைக்குச் சென்று வருவதாக தெரிவித்து வெளியே சென்றதாகவும், சடலமாக மீட்கப்படும் வரை தேடியும் கிடைக்காததால் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் பின்னர் கல்முனை பகுதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது என்பதை அறிந்து கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சென்று அங்கே பிரேத அறையில் வைக்கப்பட்ட சடலம் தனது கணவர் தான் என்பதனை உறுதிப்படுத்தியதாகவும் மரணமடைந்தவரின் மனைவி தெரிவித்தார்.

(அ)

# கல்முனை பிரதேச செயலகத்தில் நலன்புரி நன்மைகள் பிரிவு திறப்பு

அம்பாறை, பெப். 14

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அசுவெசும நலன்புரி நன்மைகளை பொது மக்களுக்கு இலகுவாக பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் "நலன் புரி நன்மைகள் பிரிவு" நேற்று கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கம் அசுவெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்த வுள்ள நிலையில் கல்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள பொதுமக்களின் நன்மை கருதியே இதற்கான தனியான பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத்



அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி. எம்.பளீல், நிருவாக கிராம உத்தியோகத்தர் உபுல் குமார, அபிவிருத்தி இணைப்பாளர் ஏ.யாசீன் பாவா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திட்டமிடல்) ஏ.எஸ்.எம்.முஜாஹித், நலன்புரி நன்மைகள் பிரிவு பொறுப்பாளர் ஏ.எல்.ஏ.நஜீபர் உட்பட சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கைபேசி திருடி 1000 ரூபாய்க்கு விற்பனை செய்த யாசகர் கைது

மட்டக்களப்பு, பெப். 14

யாசகர் ஒருவர் கைபேசி ஒன்றை திருடி அதனை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாசகம் கேட்டு வந்த முதியவர் ஒருவர் வீடு ஒன்றிலிருந்த பெறுமதி வாய்ந்த ஐ போன் ஒன்றை திருடிச் சென்றுள்ளார். இவ்வாறு திருடிச் சென்ற நபரின் புகைப்படத்தை சி.சி.ரி. வியின் உதவியுடன் முகநூலில் பதிவிட்டதன் பின்னர் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர் வசமாக சிக்கியுள்ளார்.

திருடிய கைபேசியை ஆயிரம் ரூபாய்க்கு விற்பன செய்த அந்நபர் அந்தப் பணத்தில் மது அருந்திக்கொண்டிருந்த நிலையில் அவர் பிடிபட்டுள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட கைபேசி உரிமையாளரின் கைக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

அம்பாறை, பெப். 14

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற கே ஆதம்பாவா, எம்.நபார் மற்றும் சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற எம். எம்.எம்.முபாறக் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சமுர்த்தி மாவட்ட பதில் பணிப்பாருமான வி. ஜெகதீசன், கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் உள்ளிட்ட சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், வங்கி முகாமையாளர் ஐ.எல். சித்தி ஹிதாயா கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# உலகப் பொருளாதாரம் மென்மையான இறக்கம்

## சர்வதேச நாணய நிதியம்

நியூயோர்க், பெப். 14

**பல தசாப்தங்களாக நிலவும் கடுமையான வட்டி விகித உயர்வுகளுக்குப் பின்னர் உலக பொருளாதாரம் ஒரு மென்மையான இறக்கத்தை சந்திக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**



டுபாயில் நேற்று நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் வட்டி விகிதங்கள் ஆண்டின் நடுப்பகுதியில் குறையத் தொடங்கும் என்றும் இதற்காக உலகப் பொருளாதாரம் தயாராக இருக்கின்றது என்பதில் தாம் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொரோனா தொற்றுக்கு பின்னர் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நீடித்தால் உலகப் பொருளாதாரங்களை பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேநேரம் செங்கடலில் கப்பல்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களால் ஏற்படும் விளைவுகளும் ஒட்டுமொத்த உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா எச்சரித்துள்ளார்.

# காஸாவின் ரஃபா பகுதியில் மட்டும் 1.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்வு!



நியூயோர்க், பெப். 14

காஸாவின் ரஃபா பகுதி உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றாகும் என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது.

அதன்படி இங்கு சிறுவர்கள் அதிகமாக உள்ளனர் என்றும் அவர்களில் பலர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் போரினால் இடம்பெயர்ந்த 1.3 மில்லியன் மக்களில் 600,000 பேர் சிறுவர்கள் என்றும் அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு இடமில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(அ)

# ஜனாதிபதியாக செயல்பட்ட என்னை விசாரணைக்கு உட்படுத்த முடியாது!

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

நியூயோர்க், பெப். 14

தேர்தலைச் சீர்குலைக்க முயன்ற குற்றச்சாட்டின் பேரில் தமக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதியாக செயற்பட்ட தம்மை விசாரணைக்கு உட்படுத்த முடியாது எனவும் அவர் தேர்தல் குறுக்கீடு தொடர்பான வழக்கில் கூறியுள்ளார்.

எனினும், மூன்று கீழ் நீதிமன்ற நீதிபதிகள் உடன்படாத நிலையில் மற்றைய குடிமக்களைப் போலவே அவர் மீதும் வழக்குத் தொடரலாம் என தீர்ப்பளித்தனர்.

எவ்வாறாயினும், தேர்தல் பிரசாரத்தின் போது டொனால்ட் ட்ரம்ப் மீது விசாரணை நடத்தக் கூடாதென அவரது சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

தேர்தல் காலத்தில் உச்சத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது ஒரு மாத கால குற்றவியல் விசாரணையை நடத்துவது, ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிராக பிரசாரம் செய்யும் டொனால்ட் டிரம்பின் திறனை தீவிரமாக சீர்குலைக்கும் என வும் சட்டத்தரணிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜோர்ஜியாவில் கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை டொனால்ட் ட்ரம்ப் எதிர்கொண்டுள்ளார்.

எனினும், பல தடவைகளில் அவர் குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரஃபாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இஸ்ரேலிய பணய கைதிகள் மீட்பு

ஜெருசலேம், பெப். 14

காஸாவின் தென் பகுதியினை இஸ்ரேலிய வானூர்திகள் தாக்கியதை அடுத்து ரஃபா நகரத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இஸ்ரேலிய பணயக் கைதிகள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் குறைந்தது 67 பேர் பலியானதாக ஹமாசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட அனைவரும் பொதுமக்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விடுவிக்கப்பட்ட இஸ்ரேலிய பணயக் கைதிகளுக்கு தமது வாழ்த்துக்களை வெளியிட்டுள்ள இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின்



நெத்தன்யாகு, ஏனையவர்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தொடரும் என தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தாக்குதல் நடைபெறும் ரஃபா நகரத்திற்கு செல்வதற்கு கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த நிலையில் 15 இலட்சம் பாலஸ்தீனியர்கள் தற்காலிக கூடாரங்களில் ஏதிலிகளாக உள்ளனர்.

இந்தநிலையில், அந்த பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என பல நாடுகள் வேண்டுகோள் விடுத்த போதிலும், இஸ்ரேல் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

(அ)

# முன்னாள் பிரதமர், மனைவி ஒன்றாக கருணைக் கொலை!

## இருவரும் கரம்கோர்த்த நிலையில் உயிர்மாய்ப்பு

பாரிஸ், பெப்ரவரி, 14

1977-1982 ஆண்டு காலப்பகுதியில் நெதர்லாந்தின் பிரதமராகப் பதவி வகித்தவர் ட்ரைஸ் வான் ஏஜிரி, அவரது மனைவி ஈஜெனி. இருவருக்கும் இப்போது 93 வயதாகிறது.

மீள முடியாத நோய்களுடன் போராடி வந்த இருவரும் ஒருவரை ஒருவர் பிரிய முடியாத நிலையில் சட்ட அனுமதியுடன் ஒன்றாக-ஒரே சமயத்தில் - உயிரை மாய்த்துக்கொண்டனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த ஐந்தாம் திகதி இருவரும் அவர்களது இல்லத்தில் கருணைக் கொலை செய்யப்பட்டனர் என்ற தகவலை அவர்களால் நிறுவப்பட்ட "ரைட்ஸ் ஃபோரம்" என்ற தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

ட்ரைஸ் வான் அவரது கட்சியின் முதலாவது தலைவராகவும் பிரதமராகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாடுகளுக்கான ராஜதந்திரியாகவும் பல வேறு உயர் பதவிகளை வகித்தவர். முதுமையில் கடந்த சில ஆண்டுகளாகப் பெரு மூளை வீக்க நோயினால் பாதிக்கப்பட்ட அவர் குணப்படுத்த முடியாத நோய்ப்படுக்கையில் காலத்தைக் கழித்து வந்தார். அவரது துணைவி ஈஜெனியும் முதுமைக் கால நோய்ப்படுக்கைக்குள்ளானார். மணவாழ்வில் ஒன்றாக 70 ஆண்டுகள் இணைந்திருந்த இருவரும் ஒன்றாகவே வாழ்வை முடித்துக் கொள்ளும் விருப்பத்தை வெளியிட்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது. அவர்களது விருப்பப்படி இருவரும் கரம் பற்றிய நிலையில் ஒன்றாக - ஒரே சமயத்தில்- கருணைக் கொலை செய்யப்பட்டனர்.

ட்ரைஸ் வான் அவர்களால் நிறுவப்பட்ட "ரைட்ஸ் ஃபோரம்" என்ற மனித உரிமைகள் காப்பு நிறுவனம் பலஸ்தீன மக்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறது.

கருணைக் கொலை மற்றும் மருத்துவ உதவியுடனான உயிர் மாய்ப்பு இரண்டையும் 2002 முதல் சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்ட நாடு நெதர்லாந்து. கருணைக் கொலைசெய்வோரது எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

வயோதிபத் தம்பதிகள் இவ்வாறு உயிர்மாய்த்துக் கொள்வது அரிது என்றாலும் அங்கு கடந்த 2020 ஆம் ஆண்டில் சுமார் 20 தம்பதிகள் இவ்வாறு ஒன்றாக உயிர்நீக்கும் விருப்பத்தை வெளியிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கருணைக் கொலை வேண்டிப் பலரும் விண்ணப்பித்தாலும் சட்டம் அதற்கான நிலைமைகளை வரையறை செய்கிறது. உதாரணமாக ஒருவர் நோயினால் தாங்க முடியாத வேதனையை அனுபவிப்பவராகவும்



வலியிலிருந்து மீளவோ நிவாரணம் பெறவோ முடியாதவாறான நிலைமையில் இருப்பதும் மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்தப்படவேண்டும். அத்துடன் இறக்கும் விருப்பத்தை ஒரு குறிப்பிட்ட காலம் வெளிப்படுத்தி வந்திருக்கவும் வேண்டும்.

ஐரோப்பாவின் சில நாடுகளில் மருத்துவ உதவியுடன் வாழ்வை முடித்துக்கொள்வதை அனுமதிக்கின்ற சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பிரான்ஸிலும் விரைவில் இதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(அ)

# இ.போ.ச. பஸ் - இராணுவ ட்ரக் முல்லைத்தீவில் மோதி விபத்து

## 4 இராணுவத்தினர் உள்ளிட்ட 6 பேர் காயம்



முல்லைத்தீவு, பெப். 14

**இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் செந்தமான பஸ் ஒன்றும் இராணுவத்தினரின் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்துள் ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத் தின் மாங்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கொக்காவில் பகு தியில் ஏ-9 வீதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை குறித்த விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

துணுக்காயிலிருந்து காரைநகர் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் செந்தமான பஸ் எதிரே பயணித்த இராணுவ ட்ரக் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான இரா ணுவ வாகனம் குடை சாய்ந்த தில் 4 இராணுவத்தினர் காயம டைந்துள்ளதுடன், பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவரும் காய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

குறித்த பஸ்ஸை செலுத்திய சாரதியும் காயங்களுடன் மாங் குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் பொலி ஸாரால் மாங்குளம் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

குறித்த விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள்ள னர். (அ)

# சுகாதார ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு!

## வவுனியா நோயாளர்கள் அவதி



வவுனியா, பெப். 14

நாடளாவிய ரீதியில் நேற்று சுகாதாரப் பணியாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சுகாதாரப் பணியாளர்கள் மேற் கொண்ட பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக நோயாளர்களும், பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரத்த மாதிரிக ளைப் பெறுதல் மற்றும் இரத் தப் பரிசோதனைகள் என்பன வும் நேற்று மேற்கொள்ளப்ப டாமையினால் பல நோயாளர் கள் திரும்பிச் சென்றதோடு, மருந்துகளை பெறுவதிலும் பலர் சிரமங்களை எதிர் கொண் டனர் எனத் தெரிவிக்கப்பட் டது. (அ)

# அலி சப்ரி ரஹீம் எம்.பி பயணித்த கார் விபத்து

## ஒருவர் காயம்

கொழும்பு, பெப். 14

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த கார் விபத்தில் சிக்கியதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக சாலிய வெவ பொலிஸார் தெரிவித்த னர்.

இந்த விபத்து புத்தளம் - அநுராதபுரம் வீதியின் 15 ஆவது மைல் கல் அருகில் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் விபத்து இடம் பெற்றுள்ளது.

புத்தளத்தில் இருந்து அநுரா தபுரம் நோக்கி அலி சப்ரி ரஹீம் பயணித்த கார் அதே திசையில் சென்ற சிறிய ரக உழவு இயந்தி ரத்தின் பின்பகுதியில் மோதிய தில் இந்த விபத்து ஏற்பட்டுள் ளது.

விபத்தில் காயமடைந்த அளுத்கம, புளியங்குளம் மேல் பிரிவைச் சேர்ந்த எச்.எம் ஹர் ஷன பிரதீப் என்ற நபர் புத்த ளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சிறிய ரக உழவு இயந்திரத் தைச் செலுத்திச் சென்ற நபரே விபத்தில் காயமடைந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பாரா ளுமன்ற உறுப்பினர் பயணித்த காரின் சாரதி சாலியவெவ பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார். சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் 47 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன!

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்.போதான வைத்திசா லையில் கடந்த 2023 ஆம் ஆண்டு 5,510 குழந்தைகள் பிறந் துள்ளன எனவும், அவற்றில் 47 குழந்தைகள் இறந்து பிறந்துள் ளன எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அத்துடன் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட 1052 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில், அவர் களில் 238 பேர் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளனர் என வும் அவர் மேலும் கூறினார்.

# சரியான தீர்மானம் எடுக்காவிட்டால் நாடு பாதாளத்திற்குச் சென்றுவிடும்!

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 14

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியே அதனைக் கட்டியெ ழுப்ப நடவடிக்கை எடுத்துவந் துள்ளது. என்றாலும் எமது வேலைத்திட்டத்தை பூரணப்ப டுத்துவதற்கு முன்னர் எங்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். ஆனால் இந்த முறை மக்கள் சரி யான தீர்மானத்தை எடுக்கா விட்டால் நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் வீழ்ச்சியடைந்திருக் கும் நாட்டின் பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப முடியாது. அதனை விளங்கிக்கொண்ட தாலே ஜனாதிபதி சர்வதேச நாடுகளுக்கு விஜயம் மேற் கொண்டு, அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறார். ஆனால் ஜனாதிபதியின் இந்த சர்வதேச விஜயங்களை எதிர்க் கட்சி அரசியல் வாதிகள் தொடர்ந்து விமர்சனம் செய்து வந்தார்கள். ஆனால் தற்போது அவர்களும் சர்வதேச நாடுக ளைச் சுற்றிவர ஆரம்பித்துள் ளனர்.

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் நாட்டை அபிவி ருத்தி செய்ய முடியாது என் பதை தற்போதுதான் இவர்க ளுக்கு விளங்கி இருக்கிறது. என்றாலும் சர்வதேச நாட்டு தலைவர்களை நன்கு அறிந்த ஒரே தலைவர் ரணில் விக்ரம சிங்க மாத்திரமாகும். உலக நாட்டுத் தலைவர்களை எவ் வாறு கையாளவேண்டும் என்ற அனுபவம் இருப்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே.

மேலும் நாட்டின் பொருளா தாரம் மறை பொருளாதாரமா கும்போது எல்லா சந்தர்ப்பங்க ளிலும், ஐக்கிய தேசிய கட்சி முன்வந்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும்போது, அதனை பூர ணப்படுத்த முன்னர் தேர்தலின் மூலம் எம்மை வீட்டுக்கு அனுப் பினார்கள். 2001 இல் நாட்டின் பொருளாதாரம் மறை பெருமா னத்தில் இருக்கும்போது அத னைக் கட்டியெழுப்பி வரும் போது எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள். 2015இலும் அதே நிலைமை ஏற்பட்டது.

இறுதியில் ஒரு ஆசனமும் இல்லாத நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சியை வீழ்ச்சியடை யச் செய்தது. என்றாலும் மீண் டும் நாடு வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு நாட்டை பொறுப் பேற்குமாறு தெரிவித்தனர். தற்போதும் ரணில் விக்கிரம சிங்க நாட்டை பொறுப்பேற்று, பொருளாதா ரத்தைக் கட்டி யெழுப்ப நடவ டிக்கை எடுத் துள்ளார். அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதா ரத்தை பலப்படுத்திக் கொண்டி ருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப் பினால், நாடு பாதா ளத்துக்கே சென்றுவிடும்-என்றார். (அ)

# அதிகரித்து வரும் வெப்பம்!

கொழும்பு, பெப். 14

தற்போது அதிகரித்து வரும் வெப்பமான காலநிலையினால் சிறுவர்கள் தொடர்பில் அவதா னத்துடன் செயற்படுமாறு பெற் றோர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தமது குழந் தைகளை குறைந்தது 20 நிமிடங் களாவது நீராடச்செய்வது அவ சியமென கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

அதிகரித்து வரும் வெப்பநி லையினால் சிறுவர்கள் மத்தி யில் தோல்நோய்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், உடலில் நீரிழப் புக்கான சாத்தியமும் அதிகமாக காணப்படுவதாகவும் குறிப்பி டப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எளிய ஆடை கள், இயற்கை பானங்களை வழங்குதல் ஆகியவற்றை கடைப் பிடிக்குமாறும் கொழும்புலேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார். (அ)

# புதுக்குடியிருப்பில் புதையல் தோண்டிய ஆறு பேர் கைது!

முல்லைத்தீவு, பெப். 14

முல்லைத்தீவு - புதுக்குடியி ருப்புப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

யுத்த காலத்தில் தங்கம் மற் றும் சொத்துக்கள் புதைக்கப் பட்டதாக சந்தேகப்படும் இட மொன்றில் 3 அடி நீளமும் 06 அடி ஆழமும் கொண்ட குழி யொன்றைத் தோண்டிக்கொண் டிருந்த போதே குறித்த 6 பேரும் பொலிஸாரினால் கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நெடுங்கேணி, மதவாச்சி, பத வியா,தெய்நதர, ஹக்மான ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் கள் எனவும், அவர்களை முல் லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத் துள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்தனர். (அ)

## சுகாதார...

செவ்வாய்க்கிழமையும் சுகாதார தொழில்சங்கங்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. இதனால், மருத்துவ சேவைகளை பெறுவதற்காக மருத்துவமனைகளுக்கு சென்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். எனினும், சில மருத்துவமனைகளில் இராணுவம் இந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

முன்னதாக, போக்குவரத்து உள்ளிட்ட பிற கொடுப்பனவாக 35 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. இதேபோன்ற கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி 72 தொழில்சங்கங்கள் ஒன்றிணைந்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. இறுதியாக, கடந்த 01, 02ஆம் திகதிகள் முன்னெடுக்கப்பட்டன. சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவுடன் நடத்தப்பட்ட பேச்சைத் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாகக் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அஸ்வெசும...

கலந்துகொண்டார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நாளைய தினம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்களின் ஒத்துழைப்புடன் மாகாண சபைகளின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, அஸ்வெசும திட்டத்தின் முதலாம் கட்டத்தில் 11 இலட்சம் மேன்முறையீடுகள் நாடு முழுவதும் இருந்து கிடைத்தன. இதில், வடக்கு மாகாணமே மேன்முறையீட்டு விசாரணைகளை நிறைவு செய்து பயனாளிகளின் தரவுகளை இற்றைப்படுத்தியுள்ளது - என்று நிதி இராஜாங்க அமைச்சர் கூறினார்

இதேநேரம், வடக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தரவுகள் தயார் நிலையில் உள்ளன. இதனூடாக புதிய பயனாளர்களை தெரிவு செய்வது இலகுவாக அமையும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். (ஐ)

## தேர்தல்...

விக்கிரமசிங்க பாராளுமன்றின் பெரும்பான்மையைப் பெற்று 9ஆவது ஜனாதிபதியாக தெரிவானார்.

அரசமைப்பின்படி, பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் யாருக்காக தெரிவானரோ அவரின் காலப்பகுதி முடிவடையும் வரையே பதவியில் இருக்க முடியும். கோட்டாபய ராஜபக்ஷ2019ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதியாகத் தெரிவானார். எனவே, அவரின் பதவிக் காலம் 2024 நவம்பரில் நிறைவடை கிறது. எனவே, எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்பாக செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபரில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இன்றைய நிலையில், தற்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி எனப்படும் ஜே. வி. பியின் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அநேகமாக உறுதியாகியுள்ளது. மற்றொரு முக்கிய கட்சியான பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளரை நிறுத்துமா அல்லது போட்டியிடுபவர்களில் ஒருவருக்கு ஆதரவளிக்குமா என்பது முடிவாகவில்லை என்று கூறப்படுகின்றது. இதேநேரம், தமிழ் கட்சிகள் சில பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பிலும் சிந்தித்து வருகின்றன.

இதேசமயம், போட்டியிடும் வேட்பாளர்களில் எவரும் தேர்தலில் 50வீத வாக்குகளைப் பெறுவது கடினம் என்று அரசியல் அவதானிகள் கூறி வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## சட்டவிரோத...

சுதர்சன் (21 வயது) ஆகியோரே உயிரிழந்தனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான இந்தப் பண்ணையில் இவர்கள் கூலித் தொழிலுக்கு சென்றிருந்த சமயமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காட்டு யானைகள் நுழையாதவாறு அமைக்கப்பட்ட இந்த சட்டவிரோத மின்வேலி பிரதான மின் மார்க்கத்தில் இருந்து நேரடியாகப் பெறப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

53 ஏக்கரில் அமைந்துள்ள இந்தப் பண்ணையில் முன்னரும் அங்கு பணியாற்றிய ஒருவர் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நுண்நிதி...

வலேபொட தலைமையில் கூடிய போதே இந்த விடயம் வெளிப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு நுண்நிதி கடன்களால் பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் நிறுவனங்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தன. மேலும், இலங்கை மத்திய வங்கி, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, சமுர்த்தி திணைக்களம், பெண்கள், சிறுவர் விவ காரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, நிறுவனப் பதிவாளர் திணைக் களம் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

நுண்நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகளில் ஒருவர் கூறுகையில்,

நுண்நிதி நெருக்கடியால் 28 இலட்சம் கிராமப்புற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 24 இலட்சம் பேர் பெண்களாவர். இந்தக் கடன்கள் குறைந்த தொகையாக இருந்தாலும், கிராமப்புற மக்களால் அதனைச் செலுத்த முடியாதுள்ளது. இந்தக் கடன்களுக்கு 38 - 48 சதவீத வட்டி அறவிடப்படுகிறது. இதனால், கிரா மப்புற பெண்களின் வாழ்க்கை முற்றாக மாறியுள்ளது.

இதனாலேயே, அதிகளவான கிராமப்புற பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்குச் செல்வதற்கு காரணமாகியுள்ளது.

மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழுள்ள வங்கி அல்லாத 6 பிரதான நிதி நிறுவனங்களில் கடன் பெற்ற பெருந்தொகையான குழுவினராலேயே நுண்நிதித் துறையில் இந்த நெருக்கடி உருவாகியுள்ளது.

நுண்நிதி கடனான 8 ஆயிரத்து 400 கோடி ரூபாயில் 6 ஆயிரத்து 700 கோடி ரூபாயை இந்த நிறுவனங்கள் வழங்கியுள்ளன. கடன் பெற்றவர்களின் சொத்துகளை கையகப்படுத்துவதை இந்நிறுவனங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன - என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், உத்தேச சட்டமூலத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. இதனால் தாங்கள் மேலும் பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

உத்தேச சட்டமூலத்தை முழுமையான மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை இருப்பதாக துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இதன்படி அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தாமல், மத்திய வங்கியும் நிதியமைச்சும் இணைந்து சட்டமூலத்தை மீளாய்வு செய்து, பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக சட்டமூலத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும், ஆறு பெருநிதி நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையில் அது இருக்க முடியாது. இதன் ஊடாகப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் 30 - 40 இலட்சம் வரையிலான மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று மேற்பார்வைக் குழுவின் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார். (ஐ)

## அத்தியாவசியய...

அல்லது செய்ய வேண்டிய அனைத்துச் சேவை பணிகள் அத்தியாவசிய சேவைகளாக அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## வெப்பத்தில்..

அருந்த வேண்டும்.

களைப்பு, தூக்கம், சோர்வு, தலைவலி, வாந்தி மற்றும் பசியின்மை ஆகியவை நீரிழப்புக்கான அறிகுறிகளாகும் என்றும் கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் நோய் தொடர்பான மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மழையுடனான வானிலையை எதிர்பார்க்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. தற்போது சில பகுதிகளில் சிறிதளவு மழை பெய்தாலும் ஏப்ரல் மாதம் வரையில் வறட்சி காலநிலை நிலவும் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சாந்தனை...

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது, சாந்தன் இலங்கைக்கு திரும்புவதற்காக தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணைத் தூதரகம் அனுப்பியுள்ளது. இலங்கை துணை தூதரகம் அனுப்பிய ஆவணங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

தமிழக அரசு அனுப்பிய ஆவணம் வந்து சேரவில்லை. சாந்தனை இலங்கை அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரத்தில் பிறப்பிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்தது.

இதையடுத்து வழக்கை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (ஐ)

# பதவி துறந்தார் சமிந்த; எம். பியாகிறார் நயன்!

### ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, பெப். 14

சமிந்த விஜயசிறி பதவி விலகியமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நயன வாசலதிலக நியமிக்கப்படவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

விருப்பு வாக்கு பட்டியலின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகிறார் என்று பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து சமிந்த விஜயசிறி தமது இராஜிநாமா கடிதத்தைக் கையளித்துள்ளார். (ஐ)

## நிகழ்நிலை...

திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான நகல் சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றும் அரசாங்க பேச்சாளர் மேலும் கூறினார். (ஐ)

## அநுரவோ...

தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடத்திய செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி தேர்தலை நடத்தா மல் இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அரச மைப்பில் திருத்தம் மேற்கொண்டு ஜனாதி பதி பதவி முறையை இல்லாமலாக்க கரு ஜயசூரிய தலைமையில் குழுவொன்றை அமைத்திருப்பதாகவும் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டிய எந்த தேவையும் எமக்கு இல்லை இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறி வித்திருக்கிறார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி விரிவான கூட்டணி அமைத்து செயல்பட இருக்கிறோம். அதில் ரணில் விக்கிரமசிங்கவே வேட்பாளராக கள மிறங்குவார். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தற்போது பலரும் தயாராகி வருகின்றனர். இருந்தபோதும் நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார நெரக்கடிக்கு தீர்வுகாண ஜனாதிபதி ரணில் விக்ரமங்க முறையான வேலைத்திட்டம் அமைத்து முன்னெடுத்து செல்கிறார். அதனால் அந்த வேலைத்திட்டத்தை அவ்வாறே கொண்டு செல்வதன் மூலமே நாங்கள் எதிர்பார்க்கும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். அதனால் மக்கள் இதுதொடர்பில் தெளிவாக இருக்கின்றனர்.

மேலும், ஜனாதிபதி தேர்தலில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். அது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆனால், அவர்களுக்கு நாட்டை கட்டியெ ழுப்பத் தேவையான வேலைத்திட்டங்கள் இருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண் டும். அவ்வாறு இல்லாமல் கடந்த முறை போன்று பரீட்சித்துப் பார்க்க ஜனாதி பதியைத் தெரிவ செய்ய முடியாது. அவ் வாறு செய்தால், தற்போது ஓரளவு தலைதூக்க ஆரம்பித்திருக்கும் நாட்டின் பொரு ளாதாரம் முற்றாக வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் போட்டியிடு வதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதே போன்று அநுரகுமார திஸநாயக்கவும் போட்டியிடுவதாகத் தெரியவருகிறது. ஆனால், இவர்கள் யாரும் எமக்கு எந்தவகையிலும் சவாலாகப் போவதில்லை. ஏனெனில், நாடு வீழ்ச்சியடைந்திருந்த போது நாட்டை பொறுப்பேற்க இவர்கள் யாரும் முன்வரவில்லை. அதனால் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் இவர்களி டம் இல்லை.

மேலும் ஜனாதிபதி முறைமை இல்லா மலாக்கப்பட வேண்டும் என்பது ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடாகும் 1994 கதிர்காம சம்மேளனத்தில் தீர்மானம் மேற்கொண்டிருந்தோம். அதனால் ஜனாதி பதி முறைமை இல்லாமலாக்கப்பட வேண் டும் என்பதில் எமது நிலைப்பாட்டில் மாற் றம் இல்லை. யாராவது அது தொடர்பில் பிரேரணை கொண்டுவந்தால் ஐக்கிய தேசிய கட்சி அதற்கு ஆதரவளிக்கும். அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதி பதவியை இல்லாமல் செய்ய அரசியலமைப் பில் திருத்தம் மேற்கொள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் குழு அமைத்திருப்பதாக தெரிவிக்கப்படுவதில் உண்மை இல்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஜனாதிபதியாகத் தொடர்ந்தும் ரணில் இருந்தால் நாடு வளரும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப். 14

**நாட்டில் நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை மூலம் பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என்று நம்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

ரணில் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பாரானால் நாடு முழுமையாக வளர்ச்சி பெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை எனவும் அவர் கூறினார்.

பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலத்துக்கு காலம் அரசியல் காரணங்களுக்காக விவாதிக்கப்படும் விடயங்களுள் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி விடயமும் ஒன்று.

இதேநேரம் தமிழரது தரப்பை எடுத்துக்கொண்டால் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்ட வேளையில் அதை வரவேற்றார்கள். அதன் பின்னர் அது தேவை இல்லை என இன்னொரு தரப்பு கூறிய போதும் அதையும் வரவேற்றுள்ள நிலைமைதான் இருக்கின்றது.

ஆனால் இன்று நாடு இருக்கின்ற ஒரு சூழலில் நிறைவேற்று அதிகாரத்திற்குரிய அவசியம் இருப்பதாகவே தெரிகின்றது. காரணம் நிறைவேற்று அதிகாரத்துக்கு ஊடாகத்தான் நாம் பல பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம் என நான் நம்பகின்றேன்.

இதேநேரம் நிறைவேற்று அதிகாரம் என்பது உலகின் வேறு பல நாடுகளிலும் இருக்கின்ற ஒரு விடயம்தான். இருந்தபோதும் பாராளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் சமதன்மை பேணப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தையே நான் கொண்டுள்ளேன்.

மேலும், நாடு தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கவேண்டும் என நான் நினைக்கின்றேன். அதுமட்டுமல்லாது இதை நான் பல தடவைகள் பொது வெளியிலும் கூறிவந்திருக்கின்றேன்.

அதேநேரம், தென்னிலங்கையில் நாட்டை சீர்தூக்கிச் செல்லக்கூடிய வகையில் வேறு தலைவர்கள் இருப்பதாகவும் எனக்கு தெரியவில்லை. அதாவது செயலற்றுக் கிடந்த இருந்த நாட்டை மிகக் குறுகிய காலத்துக்குள் முடியுமான வரை சீர் செய்து ஓடச் செய்துள்ளார் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவர் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பாரானால் நாடு முழுமையாக வளர்ச்சிபெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இதேநேரம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியைப் பொறுத்தளவில் நடைமுறை சாத்தியமான அரசியல் தீர்வையே கொண்டுள்ளோம். குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் தீர்வுக்கான சிறந்த ஆரம்பம் என நாம் பல தசாப்தங்களாகக் கூறிவந்துள்ளோம்.

இதையே அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலும் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் குடாநாட்டில் அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது மிக அவசியமானதாக உள்ளது. இதற்காக ஒவ்வொரு பிரதேசங்களிலும் கிராமிய குழுக்களை அமைக்க திட்டமிட்டுள்ளேன்-என்றார். (அ)

# ரணிலின் சகல திட்டங்களையும் பொதுஜன பெரமுன ஆதரிக்காது

## நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, பெப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனைத்து திட்டங்களையும் யோசனைகளையும் பொதுஜன பெரமுன ஆதரிக்காது என அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும், அவர் மேற்கொள்ளும் அனைத்து தீர்மானங்களுக்கும் ஆதரவளிக்கவேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலிமுகத்திடல் போராட்டம் மற்றும் இலங்கையில் எதிர்வரும் நாட்களில் ஏற்படும் நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு நாம் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை நியமித்தோம்.

எமது தீர்மானம் சரி என்பதை நிரூபிக்கும் வகையில் அவர் இலங்கையில் பல மாற்றங்களை மேற்கொண்டுள்ளார். எனினும், இதன் காரணமாக அவர் கூறும் அனைத்தையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாத சில திட்டங்களையும் ரணில் விக்கிரமசிங்க தயாரித்துள்ளார் - என்றார். (அ)

# வைத்தியசாலைகளில் நேற்று களமிறக்கப்பட்ட இராணுவம்!



கொழும்பு, பெப். 14

சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக முடங்கியிருந்த வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினர் மீண்டும் களமிறக்கப்பட்டனர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பினை நேற்று ஆரம்பித்துள்ளன.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உதவுமாறு சுகாதார அமைச்சு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பேரில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே, இராணுவத்தினரை வைத்தியசாலைகளுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதன்படி, தற்போது மேல், மத்திய, கிழக்கு மற்றும் வன்னி பாதுகாப்புப் படைத் தளபதிகளின் முழுமையான கண்காணிப்பில், கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள் களுபோவில, கராப்பிட்டி, மஹமோதர, பேராதனை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அத்துடன், கொழும்பு கண் வைத்தியசாலை, மாத்தளை, பொலனறுவை, மெதிரிகிரிய, ஹிங்குராக்கொட, மட்டக்களப்பு, தெஹியத்தகண்டிய, அம்பாந்தோட்டை, தெபரவெள, இரத்தினபுரி, பலாங்கொடை, எஹலியகொட, நாவலப்பிட்டி, பதுளை, எல்பிட்டிய, ஹோமாகம மற்றும் கேகாலை உள்ளிட்ட 48 வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகளை இடையூறு இன்றித் தொடர்வதற்கு சுமார் 900 இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். (அ)

# ஜனநாயகத் தமிழ்க் கூட்டணியில் தமிழரசுக் கட்சி இணையவேண்டும்

## சிறிதரனுக்கு சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

வவுனியா, பெப். 14

தமிழரசுக் கட்சியை தமது கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளுடன் இணைந்து செயற்பட தயார் என தெரிவித்திருந்த நிலையில் சிவசக்தி ஆனந்தன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏற்கனவே ஐந்து கட்சிகள் இணைந்து ஜனநாயக தமிழ்க் கூட்டமைப்பாக செயற்பட்டு வருவதாகவும், அதில் வேண்டும் என்றால் தமிழரசு கட்சி இணைந்து கொள்ளலாம்.

ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குள் பதவி தொடர்பில் பிரிவுகள் காணப்படும் நிலையில், அவர்களது அரசியல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.- என்றார். (அ)

# ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் அநுரகுமாரவை சந்தித்தார்!



கொழும்பு, பெப். 14

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் திருமதி காமென் மொரெனோவிற்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் நடப்பு அரசியல் நிலைமை பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை பாதுகாத்தல் என்பன பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் பற்றியும் இந்த உரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இருதரப்பினருக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ளல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை பிரதிநிதிகள் குழுமத்தின் பிரதிப் பிரதானி லார்ஸ் பிறெடால், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் பங்கேற்றிருந்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தென்னாபிரிக்கா முதல்நாளில் 220/6



ஹமில்டன், பெப். 14

நியூசிலாந்து அணிக்கு எதிராக இரண்டாவது டெஸ்டில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா முதல்நாளில் 220 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்துள்ளது.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்று 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில், முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஹமில்டனில் நேற்றுத் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி, தென்னாபிரிக்காவின் தொடக்க ஆட்டக்காரர்களாக நீல் பிராண்ட், கிளைட் போர்ட்ரியூன் ஆகியோர் களமிறங்கினர்.

கிளைட் போர்ட்ரியூன் டக் அவுட் ஆனார். இதையடுத்து ரேனார்ட் வான் ரொண்டர் களம் இறங்கினார். இதில் நீல் பிராண்ட் 25 ஓட்டங்களிலும் ரேனார்ட் வான் ரொண்டர் 32 ஓட்டங்களிலும் அடுத்து வந்த சுபைர் ஹம்சா 20 ஓட்டங்களிலும் டேவிட் பெடிங்காம் 39 ஓட்டங்களிலும் கீகன் பீற்றர்சன் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து ருவான் டி ஸ்வார்ட் மற்றும் ஷோன் வான் பெர்க் இணை சேர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தனர். இதில் ருவான் டி ஸ்வார்ட் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா 89 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் ரச்சின் ரவீந்திரா 3 விக்கெட்கள் வீழ்த்தினார். 2ஆம் நாள் ஆட்டம் இன்று நடைபெறும்.



# ஷமர் ஜோசப்பை வாங்கியது லக்னோ!

லக்னோ, பெப். 14

மேற்கு இந்திய தீவுகள் வீரர் ஷமர் ஜோசப்பை 3 கோடி (இந்திய) ரூபாய்க்கு வாங்கியதாக லக்னோ அணி அறிவித்துள்ளது.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட்டுக்கு பதிலாக ஷமர் ஜோசப்பை வாங்கியதாக லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

ரி - 0 உலகக் கிண்ணத்தை கருத்தில் கொண்டு மார்க் வூட் ஐ. பி. எல். தொடரில் விளையாடுவதை இங்கிலாந்து கிரிக்கெட்சபை பின்வாங்க வைத்தது. இதன்தொடர்ச்சியாக மாற்றுவீரரை தேடும் முயற்சியில் இறங்கிய லக்னோ அணி நிர்வாகம் தற்போது ஷமர் ஜோசப்பை கைப்பற்றியுள்ளது.

சமீபத்தில் நடந்துமுடிந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில்தான் அறிமுகமானார் ஷமர் ஜோசப். இந்தத் தொடரில், அவரின் அபார பந்து வீச்சு மூலம் 27 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் போட்டி ஒன்றை மேற்கிந்தியா அவுஸ்திரேலிய மண்ணில் வெற்றி கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் கே. எல். ராகுல் விலகினார்!

புதுடில்லி, பெப். 14

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியலிருந்து கே. எல். ராகுல் விலகியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் கே. எல். ராகுல் விளையாடினார். அப்போது அவருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் இரண்டாவது போட்டியில் அவர் இடம் பெறவில்லை. இந்த நிலையில் காயம் சரியாகி உடல் தகுதி பெற்றதால் அடுத்த மூன்று போட்டிகளுக்கான இந்திய அணியில் இடம்பிடித்திருந்தார்.

இந்த நிலையில் நாளை ராஜ்கோட்டில் தொடங்கும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் கே. எல். ராகுல் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நூறு சதவீதம் உடல் தகுதி பெறவில்லை என்பதால் முழுமையாக குணமடைவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அவருக்கு பதிலாக தேவ்தத் படிக்கல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



# ஆப்கானுடனான ரி - 20; இலங்கை அணியில் பினுர!



கொழும்பு, பெப். 14

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் இலங்கை அணியில் பினுர பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.

துஷ்மந்த சமீர காயமடைந்துள்ளார். இதனால், அவரின் இடத்துக்கு பினுர பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அணி விவரம் - வனிந்து ஹசரங்க (அணித்தலைவர்) சரித் அசலங்க (உப தலைவர்) பதும் நிஷங்க, குஷல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, குஷல் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், தசூன் சானக, மஹீஸ் தீக்ஷன, பினுர பெர்னாண்டோ, மதீஷ பத்திரண, டில்ஷான் மதுஷங்க, நுவான் துஷார, அகில தனஞ்சய, கமிந்து மெண்டிஸ், சதீர விக்கிரம.

# ஆசிய கிண்ண உதைபந்து கட்டார் அணி சம்பியன்!

டோஹா, பெப். 14

கட்டாரில் கடந்த வார இறுதியில் நிறைவுக்கு வந்த ஆசிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் போட்டியை நடத்திய நாடான கட்டார் சம்பியனானது.

இந்த கிண்ணத்தை இரண்டாவது தொடர்ச்சியான தடவையாக வென்றதன் மூலம் ஆசிய கிண்ண வரலாற்றில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் சம்பியனான ஐந்தாவது நாடு என்ற பெருமையை கட்டார் பெற்றுள்ளது.ஜோர்தானுக்கு எதிராக நடந்த இறுதிப் போட்டியில் ஆட்ட நேரத் தில் அக்ரம் அவிவ் அடித்த 3 பெனல்டி கோல்களின் உதவியுடன் 3 - 1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று கட்டார் ஆசிய சம்பியனானது.



ஆசிய கிண்ண இறுதிப் போட்டி வரலாற்றில் ஹெட்-ட்ரிக் முறையில் கோல் போட்ட முதலாவது வீரர் என்ற சாதனையை அக்ரம் அவிவ் நிலைநாட்டினார். (ஐ)

# ஈரான் எந்த வகையான அரசியலை கடைப்பிடித்து இஸ்லாமிய உலகில் முன்னேறி வருகிறது?



2024 ஜனவரியில் மத்திய கிழக்கு மோதலின் பிடிக்குள் வந்தது. காஸாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் மூண்டது. ஹூத்தி கிளர்ச்சிக் குழு செங்கடலில் கப்பல்களைக் கடத்தியது. அண்டை நாடான பாகிஸ்தான் எல்லைக்குள் ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதல் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குறிப்பாக பாகிஸ்தான் இதனால் அதிர்ச்சி அடைந்தது. ஏனெனில் அவை இரண்டும் நட்பு நாடுகள். பதிலுக்கு பாகிஸ்தானும் ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இரு நாடுகளும் இந்த தாக்குதல்களை தற்காப்பு நடவடிக்கை என்றும், எல்லைக்கு அப்பால் உள்ள பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாகவும் கூறியுள்ளன.

அதிகரித்து வரும் பதற்றத்திற்கு மத்தியில் சீனா தலையிட்டு நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு இரு தரப்பிடமும் வேண்டுகோள் விடுத்தது.

தனது படை வலுவைக்காட்டும் வகையில் ஜனவரியில் ஈரான் நடத்திய ஒரே தாக்குதல் இதுமட்டுமல்ல.

ஈரான் தனது நட்பு நாடுகளான சிரியா மற்றும் ஈராக்கிற்குள்ளும் தாக்குதல்களை நடத்தியது. அது இஸ்ரேலைத் தாக்கவும் ஆர்வமாக உள்ளது போலத்தெரிகிறது. சிரியாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டதாக அது குற்றம் சாட்டியுள்ளது.

ஏற்கனவே பரபரப்பாக உள்ள மத்திய கிழக்கு அரசியலில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. ஈரான் என்ன விரும்புகிறது என்பதை இந்தக் கட்டுரையில் புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

**மத்திய கிழக்கில் எதிர்ப்பின் அச்சு**

‘ஆக்ஸிஸ் ஆஃப் ரெஸிஸ்டென்ஸ்’ அதாவது எதிர்ப்பின் அச்சு என்பது மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய அரசு அல்லாத குழுக்களின் அதிகாரபூர்வமற்ற கூட்டணி என்றும் அவை ஈரானின் நட்பு வட்டம் என்றும் ஈரானிய ஊடகவியலாளரும் சர்வதேச கொள்கை மையத்தின் மூத்த ஆய்வாளருமான நிகார் மோர்த்ஸாவி கருதுகிறார்.

இதில் லெபனானின் ஹெஸ்புலா, ஈராக்கின் ஷியா போராளிக் குழுக்கள், ஹமாஸ் மற்றும் ஹூத்தி குழுக்கள் அடங்கும். ஈரான் இந்த குழுக்களை தனது எதிரிகளான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான கூட்டாளிகளாக பார்க்கிறது. அவர்களின் எதிர்ப்பை கொள்கை அடிப்படையில் ஆதரிக்கிறது.

2002 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகளை தீமையின் அச்சு என்றும், உலக அமைதிக்கு அச்சுறுத்தல் என்றும் கூறியது நினைவிருக்கலாம்.

“எதிர்ப்பு அச்சு என்பது அந்த அமெரிக்க ஆதிக்கத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். நாங்கள் தீயவர்கள் இல்லை. ஆனால் அமெரிக்கா எங்கள் பிராந்தியத்தில் அமைதியின்மையை பரப்பியுள்ளது. அந்த நாடு தனது நடவடிக்கைகளை நிறுத்தும் வரை அதை எதிர்ப்போம், போராடுவோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்,” என்று நிகார் மோர்த்ஸாவி குறிப்பிட்டார்.

சமீபத்தில் ஈராக்கின் மேற்குப் பகுதியில் அமெரிக்க வீர்கள் இருந்த ராணுவ விமான தளத்தின் மீது ராக்கெட் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதலில் ஏராளமான ராணுவ வீரர்கள் காயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஈரானுடன் தொடர்புடைய “இஸ்லாமிக் ரெஸிஸ்டன்ஸ்” என்ற குழு பொறுப்பேற்றுள்ளது.

ஈரான் மற்றும் பாகிஸ்தான் எல்லையில் நடந்த மோதல்களுக்கும் எதிர்ப்பு அச்சுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று நிகார் மோர்த்ஸாவி கூறுகிறார். பயங்கரவாத அமைப்பு என்று ஈரான் கருதும் உள்ளூர் பலூச்சி குழுதான் அதன் இலக்கு. பல மேற்கத்திய நாடுகள் எதிர்ப்பு அச்சின் பெரும்பாலான குழுக்களை பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்துள்ளன.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஏமனில் உள்ள ஹூத்தி குழு உள்ளூர் மக்களின் உரிமைகளுக்காக எதிர்ப்பைத் தொடங்கியதாக நிகார் மோர்த்ஸாவி கூறினார். அதே நேரத்தில், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக ஹெஸ்புல்லாவின் எதிர்ப்பு தொடர்கிறது. அத்தகைய சூழ்நிலையில் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் எதிராக தனக்கும், இந்த குழுக்களுக்கும் ஒரே இலக்கு இருப்பதாக ஈரான் நினைத்தது. ஆகவே அது இந்த குழுக்களுடன் சேர்ந்து கொண்டது.




ஏமனின் ஹூத்தி குழு இஸ்ரேலை எதிரியாகக் கருதுகிறது மற்றும் காஸாவில் இஸ்ரேலின் போர் தொடங்கியதில் இருந்து “ஆக்சிஸ் ஆஃப் ரெஸிஸ்டென்ஸ்” உறுப்பினரான ஹமாஸுக்கு ஆதரவைக் காட்டுவதற்காக செங்கடலில் வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது. இதற்கு பதிலடியாக அமெரிக்காவும் பிரிட்டனும் ஹூத்தி நிலைகள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தின.

இந்த குழுவிற்கு ஈரானிடம் இருந்து பொருளாதார மற்றும் அரசியல் ஆதரவு கிடைக்கிறது என்று நிகார் மோர்த்ஸாவி கூறுகிறார். அந்தக்குழு ஈரான் சொல்லியபடி நடக்கிறது. இதன் மூலம் ஈரான் தனது போட்டியாளர்களுக்கு பாரம்பரியமற்ற முறையில் ராணுவ சவாலை முன்வைக்க முடியும்.

ஈரானிடம் சக்திவாய்ந்த எதிரிகளை எதிர்த்துப் போரிட போதுமான பெரிய ராணுவம் அல்லது வளங்கள் இல்லை. எனவே அது ஒத்த எண்ணம் கொண்ட எதிர்ப்புக் குழுக்களுடன் உறவுகளை உருவாக்கியுள்ளது. மோதல் ஏற்பட்டால், எதிரிகளுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்த முடியும். ஆனால் இந்தக் குழுக்களுக்கு அளிக்கும் ஆதரவில் ஈரான் எந்த அளவுக்கு உறுதியாக உள்ளது என்பது தெரியவில்லை.

“இவை தன்னாட்சி குழுக்கள் என்றும் பொதுவான இலக்கு இருப்பதால் மட்டுமே அவற்றை ஆதரிப்பதாகவும் ஈரான் கூறுகிறது. காஸாவில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலைத் திட்டமிட்டதில் ஈரானுக்கு எந்தப் பங்கும் இல்லை என்ற அமெரிக்க உளவுத்துறை தகவல்களுடன் நான் உடன்படுகிறேன்,” என்று நிகார் மோர்த்ஸாவி குறிப்பிட்டார்.

“ஈரானிய அதிகாரிகள் இரண்டு விதமான அறிக்கைகளை வெளியிட்டனர். கொள்கையளவில் அந்த நடவடிக்கையை ஆதரிப்பதாக ஒருபுறம் தெரிவித்த அவர்கள் இது முற்றிலும் பாலஸ்தீனியர்களின் நடவடிக்கை என்றும் கூறினார்கள்.”

எதிர்ப்பின் அச்சுக்கும் ஈரானுக்கும் இடையே பல விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால் ஈரானின் பங்கைப் புரிந்து கொள்ள அதன் வரலாற்றைப் பார்க்க வேண்டியது அவசியம் என்று நிகார் மோர்த்ஸாவி கூறுகிறார்.

**ஈரானில் ஆட்சி மாற்றம்**

தற்போதைய ஈரான் ஒரு இஸ்லாமிய குடியரசு. ஆனால் அதற்கு முன் அங்கு முடியாட்சி இருந்தது. ஈரானின் ஷா மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் நாட்டை நவீனமயமாக்க விரும்பினார். ஈரானின் ஷா முகமது ரெசா பஹ்லவிக்கும் அமெரிக்காவிற்கும் நெருங்கிய உறவு இருந்தது என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இரானிய வரலாறு மற்றும் அரசியல் பேராசிரியரான மரியம் ஆலெம்சாதே கூறுகிறார்.

“முகமது ரெசா பஹ்லவி மகத்துவத்தை விரும்பினார். மேலும் தன்னை அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியாகக் கருதினார். 1979 இஸ்லாமியப் புரட்சிக்கு முன்னர் ஈரானின் வெளியுறவுக் கொள்கையானது, அமெரிக்காவுட

(16ம் பக்கம் பார்க்க)

# டில்லிக்குப் போன ஜே.வி.பி

நிலாந்தன்

ஜேவிபியின் தூதுக்குழு ஒன்று புதுடெல்லிக்கு சென்று திரும்பி இருக்கின்றது. இந்திய அரசாங் கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று உத்தியோகபூர்வமாக அக்குழு அங்கு சென்று இருக்கின்றது. அங்கே இந்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு துறை ஆலோசகர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களையும் அத்தூதுக்குழு சந்தித்திருக்கின்றது.

அரசியலில் இது ஒரு தலைகீழ் மாற்றம் என்று வர்ணிக்கலாமா? ஜேவிபி ஒர் ஆயுதப் போராட்ட இயக்கமாக இருந்த போது அதன் ஐந்து வகுப்புகளில் ஐந்தாவது வகுப்பு இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிரானது. ஜேவிபி இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாக மலையக மக்களை பார்த்தது. மேலும் ஜேவிபியின் முதலாவது ஆயுதப் போராட்டத்தை நசுக்கியதில் இந்தியப் படைகளுக்கும் பங்களிப்பு உண்டு. அதுபோல ஜேவிபியின் இரண்டாவது ஆயுத போராட்டத்தை பொறுத்தவரையிலும், அதை நசுக்குவதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்திய அமைதி காக்கும் படையினர் பங்களிப்பு செலுத்தினார்கள். எப்படி என்றால் ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டம் எனப்படுவது இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிரானது. அதாவது இந்தியாவுக்கு எதிரானது. இந்நிலையில் ஜேவிபியை விடவும் அதிக இந்திய எதிர்ப்பை கையில் எடுத்த பிரேமதாச இந்திய அமைதி காக்கும் படையை வெளியே போகுமாறு உத்தரவிட்டார். அதற்கு அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பையும் பெற்றார். அவ்வாறு இந்திய அமைதி காக்கும் படை வெளியேற்றப்பட்ட பின் பிரேமதாச ஜேவிபியை மிகக் கொடூரமாக வேட்டையாடினார்.

இப்பொழுது ஜேவிபி ஒரு மிதவாதக் கட்சி. எனினும் கடந்த 2022 ஆம் ஆண்டு நிகழ்ந்த அரகலய என்று அழைக்கப்படுகின்ற சிங்கள மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களின் போது ஜேவிபியின் செல்வாக்குக்கு உட்பட்ட மாணவ அமைப்புகள் பின்னணியில் நின்றன. அரகலய போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தின் போது இந்தியாவுக்கு எதிரான சுலோகங்களையும் காட்சிப்படுத்தினார்கள். குறிப்பாக இந்தியாவின் அதானி குழுமம் ராஜபக்சக்களின் ஒத்துழைப்போடு இலங்கையில் முதலீடு செய்வதற்கு எதிராக அச் சுலோகம் காணப்பட்டது. அதில் இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக என்ற வார்த்தை காணப்பட்டது. அதாவது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை ஜேவிபி இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டோடு தான் காணப்பட்டது. அதன் ஆயுதப் போராட்டங்களிலும் அதுதான் நிலைமை. அது சம்பந்தப்பட்ட ஆயுதம் இல்லாத மக்கள் எழுச்சியின் போதும் அதுதான் நிலைமை.

அவ்வாறு தொடர்ச்சியாக இந்திய எதிர்ப்பை முன்னெடுத்த ஒரு கட்சியின் தூதுக்குழுவை தலைநகருக்கு வருமாறு இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருக்கின்றது. ஏன்?

அரகலய போராட்டத்தின் பின்னர் ஜேவிபியின் தலைவரை அமெரிக்க தூதுவரும் உட்பட சில ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஏற்கனவே சந்தித்திருக்கிறார்கள். இப்பொழுது இந்தியா அவர்களை உத்தியோகபூர்வமாக அழைத்திருக்கின்றது.

ஏனெனில் ஜேவிபியானது அண்மை ஆண்டுகளில் குறிப்பாக அரகலயவின் பின் சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கு பெற்ற ஒரு கட்சியாக வளர்ந்து வருவதே காரணம். தென் இலங்கையில் நடத்தப்பட்ட கருத்து கணிப்புகளின்படி ஜேவிபிக்கு மக்கள் ஆதரவு அதிகரிப்பது தெரிகிறது. இக் கருத்துக் கணிப்புகள் முழுமையான திருத்தமானவயா என்ற கேள்விகள் உண்டு. எனினும் ஜேவிபியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்பது மட்டும் வெளிப்படையானது. ஆனால் இந்த ஆதரவு மிகைப்படுத்திக் காட்டப்படுகிறது என்றும் தென்னிலங்கையில் உள்ள சில தொழிற்சங்கவாதிகள் கூறுவது உண்டு. தனது பலத்தைக் குறித்து ஜேவிபி மிகைப்படுத்தி சிந்திக்கின்றது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதுதான் அக்கட்சி எதிர்க் கட்சிகளோடு இணைந்த ஒரு கூட்டை உருவாக்க முடியாமலிருப்பதற்குக் காரணம் என்றும் கருதப்படுகின்றது.

> **தமிழ்க் கட்சிகள் ஒன்றில் தேர்தல் மூலம் மக்களானையைப் பெற்று தங்களை பலமான வலு மையங்களாகக் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கக்கூடிய சக்தி தமக்கு உண்டு என்பதனை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு தங்களைத் தவிர்க்கப்படவியலாத வலு மையங்களாகக் கட்டி எழுப்பாதவரை, இந்தியா மட்டுமல்ல, ஐநா மட்டுமல்ல, அமெரிக்கா மட்டுமல்ல, ஏன் அவர்களுடைய சொந்தத் தமிழ் மக்களே அவர்களை எதிர்பார்ப்போடு பார்க்கப் போவதில்லை.**

லண்டனை மையமாகக் கொண்ட ஒரு தமிழ் அரசியல் விமர்சகர் ஜேவிபியின் ஆதரவு வளர்ந்திருக்கிறதா என்ற கேள்விக்கு கூறிய பதிலை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். பாம்பாட்டிக்கு வெள்ளி திசை வந்தால், அவன் மேலும் இரு நாகக் குட்டிகளை வாங்கி வைத்துக் கொள்வான். அதற்கு மப்பால் அவன் அரசனாகப் போவதில்லை என்று. அப்படித்தான் ஜேவிபியின் வளர்ச்சி என்பது மிஞ்சி மிஞ்சிப் போனால் 15 விகித வாக்குகளைத் தான் பெற முடியும் என்றும் ஒரு கருத்து உண்டு. ஜேவிபியின் மிதவாத அரசியல் எழுச்சிக் காலம் எனப்படுவது விடுதலைப்புலிகள் கோலோச்சிய ஒரு காலகட்டம் தான். அக்கால கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான விட்டுக் கொடுப்பற்ற இனவாதத்தை ஜேவிபி முன்னெடுத்தது. அதன் விளைவாக இனவாதத்தின் கூர் முனைகளில் ஒன்றாக அது காணப்பட்டது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ எல்லா இனவாதிகளை விடவும் பெரிய இனவாதியாக எழுச்சி பெற்று விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடித்தபொழுது, ஜேவிபியின் அரசியல் அடித்தளம் பலவீனமடைந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டபொழுது ஜேவிபியும் ஏறக்குறைய தோற்கடிக்கப்பட்டது என்று திருநாவுக்கரசு கூறுவார்.

எனினும், 2022ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது ஜேவிபியின் செல்வாக்கை மேலும் வளத்தெடுத்தது. தென்னிலங்கையில் தோன்றியிருக்கும் தலைமைத்துவ வெற்றிடம் ஜேவிபியின் கவர்ச்சியை அதிகப்படுத்தியது. அனுரகுமாரவின் தலைமைத்துவத்தை நோக்கிய எதிர்பார்ப்புகளும் அதிகரித்தன. படைதரப்பின் மத்தியிலும் ஓய்வு பெற்ற படைத்தரப்பின் மத்தியிலும் அவருக்கு செல்வாக்கு அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் ஜேவிபியை நோக்கிய எதிர்பார்ப்பு அந்தளவுக்கு இல்லை.

ஏனெனில் இனப்பிரச்னை தொடர்பாக ஜேவிபி இன்றுவரையிலும் தமிழ் மக்களுக்குத் திருப்தியூட்டும் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. தென்னிலங்கையில் உள்ள சிங்களக் கடும்போக்கு வாக்குகளை இழப்பதற்கு அவர்கள் தயாரில்லை. அதைவிட முக்கியமாக, இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இணைக்கப்பட்ட வடக்கையும் கிழக்கையும் ஒரு வழக்கின் மூலம் பிரித்தது ஜேவிபி தான். அது தொடர்பாக ஜேவிபி இன்று வரையிலும் வருத்தம் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும் சுயநிர்ணய உரிமையையும் ஜேவிபி ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கைப் பிரித்த ஒரு கட்சியை இந்தியா டெல்லிக்கு அழைத்திருக்கின்றது. அதே சமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவை தலையிடுமாறு கோரி பல மாதங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு கடிதம் எழுதிய தமிழ் கட்சிகளுக்கு இன்று வரை இந்தியாவிடம் இருந்து அழைப்பு கிடைக்கவில்லை. கடிதம் எழுதிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. இக்காலப் பகுதிக்குள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் வந்த இந்திய பிரமுகர்கள் யாரும் குறிப்பிட்ட 6 கட்சிகளையும் ஒன்றாக அழைத்துப் பேசியதாகத் தெரியவில்லை. அந்த ஆறு கட்சிகளுக்குள் இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமான கட்சிகள் உண்டு. குறிப்பாக ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த காலகட்டத்தில் இந்திய அமைதிகாக்கும் படையோடு இணைந்து செயல்பட்ட, இந்தியாவின் மாகாண சபையை ஆபத்துக்களின் மத்தியிலும் துணிந்து கையில் எடுத்த கட்சிகள் அதில் உண்டு.

தமிழ்த் தேசியப்பரப்பில் 13வது திருத்தம் குறித்த பரவலான எதிர்ப்பின் பின்னணியில், மேற்படி கட்சிகள் இந்தியாவை நோக்கி அப்படி ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதின. ஆனால் அக்கடிதத்தை மதித்து அல்லது பொருட்படுத்தி இந்திய அரச உயர் மட்டும் இன்று வரையிலும் அக்கட்சிகளோடு உத்தியோகபூர்வமாக சந்திப்புகளை ஒழுங்குபடுத்தவில்லை. கூட்டமைப்பு என்ற அடிப்படையில் அல்லது பொதுவாக தமிழ் கட்சிகள் என்ற அடிப்படையில் சில சந்திப்புகள் நிகழ்ந்தன. ஆனால் கடிதம் எழுதிய கட்சிகளைச் சந்தித்தல் என்ற அடிப்படையில் அதாவது கடிதத்திற்கு பதில் கூறுவது என்ற அடிப்படையில் சந்திப்பெதுவும் இன்று வரை நடக்கவில்லை.

ஆனால் தொடக்கத்திலிருந்தே இந்திய எதிர்ப்பை அதன் அரசியல் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த ஒரு கட்சி அதிலும் குறிப்பாக, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் இந்திய எதிர்ப்பை அதன் சுலோகங்களில் ஒன்றாகக் கொண்டிருந்த ஒரு கட்சியை, இந்தியா புது டெல்லிக்கு அழைத்திருக்கிறது. இது எதை காட்டுகின்றது?

ஜேவிபி தன்னை ஒரு வலு மையமாகக் கட்டி எழுப்பி வருவதுதான் பிரதான காரணம். அது ஒரு பலமான சக்தி என்று மேற்கு நாடுகளும் இந்தியாவும் நம்புகின்றன. அதன் பலத்தை அவர்கள் எந்தளவுக்கு மதிப்பிட்டு வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் நடக்கக்கூடிய தேர்தல்களிலும் ஜேவிபி சில சமயம் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக வளரலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் மக்கள் எழுச்சிகளின் பின்னணியில் நிற்கக்கூடிய ஜேவிபியோடு பேச வேண்டிய தேவை உண்டு. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை வேறு ஒரு விசேஷ காரணமும் இருக்கலாம்.

இந்தியா ரணில் விக்கிரமசிங்கவை அதிகம் ஆர்வத்தோடு பார்க்கவில்லை என்பது வெளிப்படையானது. அவர் கெட்டிக்காரன். தந்திரசாலி. எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைக்கக் கூடியவர். அது இந்தியாவுக்குப் பாதகமானது. இந்தியா தன்னை நோக்கி நெருக்கி வரக்கூடிய பலவீனமான ஒரு தலைவரை ஆட்சிக்கு கொண்டுவர விரும்பக் கூடும் என்பதனை கடந்த ஆண்டு தமிழ் கட்சிகளிடம் டளஸ் அழகப்பெருமாவை ஆதரிக்குமாறு இந்தியா கேட்ட பொழுது ஊகிக்கக்கூடியதாக இருந்தது. எனவே இந்தியா இப்பொழுதும் அதே நிலைப்பாட்டோடு இருந்தால், ரணிலுக்கு எதிராக எழுச்சி பெறக்கூடிய சக்திகளை அல்லது ரணிலுக்கு எதிராக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கூட்டுக்களுக்குள் இணையக்கூடிய தரப்புகளை அழைத்துப் பேச வேண்டிய ஒரு தேவை, கையாள வேண்டிய ஒரு தேவை இந்தியாவுக்கு உண்டு. அந்த அடிப்படையில் இந்தியா ஜேவிபியை உத்தியோகபூர்வமாக அழைத்திருக்கலாம்.

ஆனால் இந்தியா தங்களை உத்தியோகபூர்வமாக அழைக்கவில்லை என்று கருதும் தமிழ் கட்சிகள் இதில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால், தங்களை ஒரு வலு மையமாக அவர்கள் கட்டியெழுப்பினால் எல்லாப் பேரரசுகளும் அவர்களை நோக்கி வரும் என்பதுதான். தமிழ்க் கட்சிகள் ஒன்றில் தேர்தல் மூலம் மக்களானையைப் பெற்று தங்களை பலமான வலு மையங்களாகக் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கக்கூடிய சக்தி தமக்கு உண்டு என்பதனை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு தங்களைத் தவிர்க்கப்படவியலாத வலு மையங்களாகக் கட்டி எழுப்பாதவரை, இந்தியா மட்டுமல்ல, ஐநா மட்டுமல்ல, அமெரிக்கா மட்டுமல்ல, ஏன் அவர்களுடைய சொந்தத் தமிழ் மக்களே அவர்களை எதிர்பார்ப்போடு பார்க்கப் போவதில்லை.

(ஆதவன் செய்தி)

# ஈரான் எந்த வகையான அரசியலை கடைப்பிடித்து...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

னான அதன் கூட்டாண்மையில் கவனம் செலுத்தியது. இது மத்திய கிழக்கில் உள்ள மற்ற நாடுகளுடனான அதன் உறவுகளை பாதித்தது.”

அந்த நேரத்தில் அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் அவற்றின் நட்பு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்தது. மத்திய கிழக்கில் தனது செல்வாக்கை அதிகரிக்க அமெரிக்கா ஒரு கூட்டாளியை விரும்பியது. அதே சமயம் ஈரானையும் மேற்கத்திய நாடுகளைப் போல ஆக்கும் முயற்சிகளை ஷா தீவிரப்படுத்தினார்.

அவரது நிர்வாகத்திற்கு எதிராக நாட்டில் வேலை நிறுத்தங்களும் கலவரங்களும் தொடங்கின. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆட்சியில் இருந்த ஷா 1979 இல் நாட்டை விட்டு வெளியேறினார். நாடு கடந்து வாழ்ந்துவந்த மதத் தலைவரான அயதுல்லா கோமேனி ஈரானுக்குத் திரும்பி, நாட்டின் உச்ச தலைவராக ஆனார்.

இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு ஈரானில் மக்கள் வாழும் முறையில் மிகப்பெரிய மாற்றம் வந்ததாக மரியம் அலெம்சாதே கருதுகிறார். பெண்கள் ஹிஜாப் அணிவதும், ஆண்கள் சாதாரண உடைகள் அணிவதும் கட்டாயமாக்கப்பட்டது.

இரண்டாவது மாற்றம் ஈரானின் வெளியுறவுக் கொள்கையில் வந்தது. ஈரான் உலகின் பெரும்பாலான நாடுகளை எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கியது. உலகின் பெரும் வல்லரசுகளின் செல்வாக்கிலிருந்து விலகி இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இதனுடன் மற்ற நாடுகளில் இஸ்லாமியப் புரட்சியைக் கொண்டுவருவதற்கான திட்டங்களும் தீட்டப்பட ஆரம்பித்தன. நாட்டின் செல்வாக்குமிக்க சமூகங்களின் மிகச் சிறிய பகுதியினர் மட்டுமே இதை விரும்பியதால் இதற்கான உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று மரியம் அலெம்சாதே கூறுகிறார்.

சிரியா, லெபனான் மற்றும் பாலஸ்தீனிய குழுக்களுடன் உறவுகளைப் பேணி வந்த சில மதத் தலைவர்கள் மற்றும் கெரில்லா போராளிகளின் தலைவர்கள் இதை விரும்பினர். ஆனால் இஸ்லாமியப் புரட்சியின் சில ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தத் தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். ஏனென்றால் ஈரானின் முக்கிய கொள்கை நாட்டை கட்டியெழுப்புவதிலும், பிராந்தியத்தில் மற்ற நாடுகளுடன் கூட்டணியை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தியது என்று மரியம் அலெம்சாதே மேலும் கூறினார்.

ஈரானின் உச்ச தலைவர் 1989 இல் காலமானார். அவருக்குப் பின் வந்த அயதுல்லா அலி கமேனி கடந்த 35 ஆண்டுகளாக ஆட்சியில் உள்ளார். ஆனால் ஈரானில் அதிகாரக் கட்டமைப்பின் வடிவம் என்ன?

நாட்டின் அதிகார ஏணியில் மேல் படியில் உச்ச தலைவர் இருக்கிறார். அதன் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றம் உள்ளது. ஆனால் பல இணை அமைப்புகளுக்கு கொள்கை முடிவுகளில் பங்கு உண்டு என்கிறார் மரியம் அலெம்சாதே.

இதில் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையும் அடங்கும். இந்த ராணுவ அமைப்பு நாட்டின் பாதுகாப்புக்காகவும், இஸ்லாமிய புரட்சிக்காகவும் உருவாக்கப்பட்டது. இது ஒரு ராணுவ அமைப்பு மட்டுமல்ல. இது நிதி மற்றும் வெளியுறவுக் கொள்கையிலும் செல்வாக்கு செலுத்துகிறது.

மேற்கத்திய அரசியல் மற்றும் கலாச்சார சித்தாந்தத்திற்கு ஈரானில் எதிர்ப்பு தொடர்கிறது. மேற்கத்திய நாடுகளுடனான ஈரானின் உறவுகள் மிகவும் கசப்பானதாக மாறும்போது, அதற்கு பொருளாதார பங்காளிகள் எங்கிருந்து கிடைப்பார்கள்?

**ரஷ்யா மற்றும் சீனாவுடன் பொருளாதார ஒத்துழைப்பு**

“ஈரான் தற்போது ரஷ்யா, சீனா மற்றும் ஆசியாவின் முக்கிய பொருளாதாரங்களுடன் பொருளாதாரக் கூட்டணிகளை உருவாக்கி வருகிறது,” என்று வாஷிங்டனை தளமாகக் கொண்ட ப்ரூக்கிங்ஸ் இன்ஸ்டிடியூஷனின் வெளியுறவுக் கொள்கைத் திட்டத்தின் துணைத் தலைவரும் இயக்குநருமான சூசன் மேலோனி கூறுகிறார்.

“ஈரானை, ரஷ்யா மற்றும் சீனாவுக்கு சமமாக மாற்ற நாட்டின் தலைமை விரும்புகிறது. இந்த கூட்டணியின் மூலம் உக்ரேன் போருக்கான ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை ஈரானிடம் இருந்து ரஷ்யா பெற்று வருகிறது. அதே சமயம் இதன் மூலம் ஈரான் பொருளாதார பலன்களை பெற்று வருகிறது.”

உலகிலேயே ரஷ்யா மற்றும் ஈரான் மீதும்தான் மிக அதிக தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. தனது அணுமின் நிலையங்களில் சர்வதேச கண்காணிப்பை மறுப்பதாலும், வெளிநாடுகளில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு முக்கிய நபர்களை கொன்றதாகவும் ஈரான் மீது குற்றம் சாட்டப்படுவதாலும் அந்த நாட்டின் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு நாடுகளும் பொருளாதாரத் தடைகளை தவிர்த்து வர்த்தகத்தைத் தொடர ஒருவருக்கொருவர் உதவுவதாக சூசன் மேலோனி கூறுகிறார். ஈரான் தனது ராணுவத் திறனை வலுப்படுத்த ரஷ்யாவிடமிருந்து போர் விமானங்கள் மற்றும் பிற ராணுவப் பொருட்களை பெற விரும்புகிறது. இரு நாடுகளுக்கும் இடையே இதுபோன்ற ஒத்துழைப்பு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

ஈரானுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளும் பல ஆண்டுகளாக வலுப்பெற்று வருகின்றன.

ஈரானின் பொருளாதாரத்திற்கு சீனா முக்கியமானது. ஏனெனில் அமெரிக்காவின் தடைகள் இருந்தபோதிலும் ஈரானின் பெருமளவு எண்ணெயை சீனா வாங்குகிறது. சீனாவும் ரஷ்யாவும் ஈரானுடன் நெருங்கிய உறவை வளர்த்துள்ளன. ஏனெனில் ஈரான் அமெரிக்காவின் தீவிர எதிரியாக உள்ளது என்று சூசன் மேலோனி குறிப்பிட்டார்.

ஆசியாவிலும் ஈரான் புதிய கூட்டணிகளை உருவாக்கி வருவதாக அவர் மேலும் கூறுகிறார். 2003 இல் சதாம் உசேன் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பிறகு ஈராக்கில் ஈரானின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. ஈராக்கிற்கு மின்சாரம் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

சீனாவின் மத்தியஸ்தத்துடன் ஈரான், சவூதி அரேபியா மற்றும் பிற வளைகுடா நாடுகளுடன் தனது உறவுகளை மேம்படுத்தியுள்ளது. ஆனால் பொருளாதாரத் தடைகளால் ஈரானின் பொருளாதாரம் பில்லியன் கணக்கான டாலர்கள் இழப்பைச் சந்தித்துள்ளது. அது தனது கொள்கைகளுக்காக பெரும் விலையை கொடுக்க வேண்டியதாயிற்று.

